Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள்-12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி-26 | 11-09-2004 | சனிக்கிழமை | ஓசை -206

க ணே சா ந கை யு க ந்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-2225987
(சி-10148)



## மட்டு.புல்லுமலையில் நடந்த தாக்குதல்

# புலிகளைக் கோபமூட்டி சமாதான வழியிலிருந்து விலகிச்செல்ல வைக்கும் நோக்கம் கொண்டது

### கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு சு.ப தமிழ்ச்செல்வன் கடிதம்

**விடுதலைப்புலிகளை கோபமூட்டி சமாதான முயற்சிகளில் இருந்து விலகவைக்கும் நோக்கத்துடனேயே புல்லுமலைத் தாக்குதல் சிறிலங்கா இராணுவத்தால் நடத்தப்பட்டுள்ளது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு இவ்விவகாரம் குறித்து எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;செப்ரெம்பர் 7ம் திகதி இரவு 10 மணியளவில் விடுதலைப்புலிகளின் புல்லுமலை முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகள் சிறிலங்கா இராணுவம் மற்றும் தமிழ் இளைஞர்களை உள்ளடக்கிய 30 பேர் கொண்ட குழுவொன்றினால் தாக்கப்பட்டது. இத்தாக்குதலானது அந்நிலைகளிலிருந்த விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது. பதில் தாக்குதலில் தாக்குதல் நடத்தவந்த இருவர் கொல்லப்பட்டதாகத் தகவல் தரப்பட்டுள்ளது.

இத்தாக்குதலை மேற்கொண்டவர்கள் இராணுவ முகாம் அமைந்திருக்கின்ற திசையிலிருந்து வந்தே தாக்குதலை மேற்கொண்டனர். அத்தோடு அப்பகுதியில் தங்கியுள்ள கண்ணிவெடியகற்றும் நிறுவனமான மக் நிறுவன ஊழியர்களின் தகவல்களின் பிரகாரம், இத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கக் கூட்டமும் வித்துடல் விதைப்பும்

கடந்த 08-09-2004 அன்று முல்லை மாவட்ட கடற்பரப்பில் பயிற்சியின் போது சாவடைந்த கடற்புலி மேஜர் சுதர்சனா (துரைசிங்கம்- சதாநந்தினி யாழ் மாவட்டம்) வின் வித்துடல் நேற்று கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் விதைக்கப்பட்டது. முன்னதாக அவரது இல்லத்திலிருந்து வித்துடல் எடுத்து வரப்பட்டு நேற்று பகல் 1.00 மணிக்கு யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி அவர்களது தலைமையில் நவாலி மகாவித்தியாலய மண்டபத்தில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

ஈகச்சுடரினை பெற்றோர் ஏற்றி வைக்க மலர் மாலையினை யாழ். மாவட்ட கடற்புலிகளின் அரசியல் பிரிவைச் சார்ந்த அருணன், கடற்புலிகளின் மகளிர் துணைத்தளபதி நாகதர்சினி,யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், கடற்புலிகளின் நளாயினி படைத்தளபதி தமிழவள்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா-இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் அடுத்தமாத இறுதியில் மேற்கொள்ளப்படும்

### சிறில.பாதுகாப்பு அமைச்சின் செயலர் தெரிவிப்பு

சிறிலங்கா இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் அடுத்த மாத இறுதியில் செய்துக்கொள்ளப்படவுள்ளதாக பாதுகாப்புஅமைச்சின் செயலர் சிறில் ஹேரத் தெரிவித்துள்ளார். இதன் கீழ் புலனாய்வுத் தகவல்களை பரிமாறிக்கொள்ளல்,இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்தல் போன்றவை உள்ளடக்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார். இதேவேளை இது குறித்து இறுதி உடன்படிக்கைக்கு வழிவகுக்கும் முகமாக இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கைக்கு விரைவில் வரவுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார் (32)

## ஹரிம்பீரிஸ் யாழ் செல்கிறார்

மீள்குடியமர்வு விவகார அமைச்சின் ஆலோசகரும் சனாதிபதியின் பேச்சாளருமான ஹரிம் பீரிஸ் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் செல்லவுள்ளார். அரசாங்கத்தினால் தற்சமயம் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாலங்களின் திருத்தப்பணிகளை பார்வையிடும் அவர், நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தையும் பார்வையிடுவர், பின்னர் யாழ்ப்பாண செயலகத்தில் அரசாங்க அதிபர்உட்பட்ட திணைககள தலைவர்களைச் சந்திக்கிறாா. (32)

## தமிழ்ச்செல்வன் எரிக் சூல்ஹெய்ம் வியாழக்கிழமை சந்திப்பர்

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாக நோர்வே தூதரகம் அறிவித்துள்ளது.

இவருடன் இலங்கைக்கான நோர்வே தூதுவர் கான்ஸ்பிரஸ்கரும் கிளிநொச்சிக்கு வருகைதரவுள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு வரும் விசேட தூதுவர் 17 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார். அப்போது அவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் தலைவர்களையும் பொது அமைப்புக்களைச் சேர்ந்தோரையும் சந்திப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியப் படகுகள் பிடிக்கப்பட்டன

பள்ளிக்குடா கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித் தொழிலில் ஈடுபட்ட மூன்று இந்திய மீன்பிடி படகுகளையும், அவற்றிலிருந்த மீனவர்களையும் உள்ளூர் மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு பிடித்துள்ளனர்.

பிடிபட்ட மீனவர்களையும் படகுகளையும் அப் பிரதேச மீனவர் கூட்டுறவுச் சங்க சமாசத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவ்வாரத்தில் வடக்கு கடற்பரப்பில் இந்திய மீன்பிடி இழுவைப்படகுகள் பெருமளவில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சின்னமுத்து, ருபெல்லா தடுப்பு மருந்து இன்றும் நாளையும் வழங்க ஏற்பாடு

சின்னமுத்து உங்கள் இறப்பிற்கும் ஜேர்மன் சின்னமுத்து பிறவிக்குறைபாட்டிற்கும் வழிவகுக்கின்றது எனவே MR தடுப்பு மருந்து உங்களுக்கு இவற்றிலிருந்து மீள பூரணபாதுகாப்பை வழங்குகின்றது. நீங்கள் 01.01.1983 இற்கும் 01.01.1988 இற்கும் இடை யில் பிறந்தவராயின் தடுப்பு மருந்தேற்றும் நிலைய்ங்களுக்கு விரைந்து சென்று தடுப்பு மருந்தேற்றிப் பூரணபாதுகாப்புப் பெறுங்கள் ஏற்கனவே சின்னமுத்து, ஜேர்மனி சின்னமுத்து (ருபெல்லா) தடுப்பு மருந்து பெற்றாலும் இன்றும், நாளையும் வழங்கப்படும் தடுப்பு மருந்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

## இ.தொ.கா.வினர் இருவர் பதவியேற்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் அமைச்சராகவும், பிரதி யமைச்சராகவும் சனாதிபதி முன்னிலையில் நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்கள். தோட்ட உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கம் நேற்று முற்பகல் சனாதிபதியின் முன்னிலையில் சத்தியபிர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய உயா ஸ்தானிகர் தமிழ்க் கூட்டமைப்பு பா.உ.கள் சந்திப்பு

### இ.த.அதிகார சபை குறித்து வலியுறுத்து



(கொழும்பு)

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் நேற்று கனேடிய உயர்ஸ்தானிகர் வலரி ரேமனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த சந்திப்பு கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது.

இலங்கையில் சமாதான முன்னெடுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சியின் அடிப்படையிலேயே இந்த பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும் எனவும் இந்த சந்திப்பின் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்

கிழக்கில் இடம்பெறும் மோதல் நிலைகள் போர் நிறுத்த உடன்பாட்டை முறித்து விடும் என்பதால் உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக்கோரி சர்வதேசம்,சனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் வலியுறுத்தலை விடுக்க வேண்டும் எனவும் கூட்டமைப்பினர் கனேடிய உயர்ஸ்தானிகரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவுக்கு 263 மில்.அமெ.டொலர் நிதியுதவி வழங்க ஜப்பான் சம்மதம்

### அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

ஜப்பானிய அரசாங்கம் சிறிலங்காவுக்கு பாரிய நிதியுதவி ஒன்றை வழங்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து நேற்றுமுன்தினம் தற்சமயம் ஜப்பான் சென்றுள்ள சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருக்கு அறிவித்துள்ளது அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஜப்பானில் சிறிலங்காவுக்கு நிதியுதவியை கோரி பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார் இலங்கையின் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க ஜப்பானின் நிதியுதவிகள் அவசியம் என்பதை அவர் அங்கு வலியுறுத்தியுள்ளார். இந்த நிலையில் லக்ஸ்மன் கதிர்காமரை சந்தித்த ஜப்பானின் நிதியமைச்சர் சிறிலங்காவுக்கு மூன்று பிரிவுகளுக்காக உதவி வழங்குவது குறித்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**தவறிவிட்டது**

கடந்த 08.09.2004 அன்று மாலை 3.30 மணிக்கு புளியங்குளத்திலிருந்து புதுக்குடியிருப்பிற்கு வந்த பேருந்தில் செஞ்சுடர் குடியிருப்பு கைவேலியைச் சேர்ந்த மயில்வாகனம்-தெற்பாரணசாமி என்பவரது 9ஆயிரம் ரூபா ஒட்டுசுட்டானுக்கும், புதுக்குடியிருப்புக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (4691)

**காணி விற்பனைக்கு**

திருவையாறு 1 ஆம் பகுதியில் 47 ஆம் இலக்க காணி 3ஏக்கர் 23 பேச்விற்பதற்கு உண்டு தொடர்பு கொள்க. இராமசாமி புவனேந்திரன் "அஞ்சல் பல்பொருள் வாணிபம்'' கரடிப் போக்கு கிளிநொச்சி. (4914)

# கரவெட்டி ஆட்டுப்பட்டிக் கிராமத்தில் புதிய பொதுநோக்குமண்டபம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

நிகொட் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்



யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கரவெட்டிதுன்னாலை, ஆட்டுப்பட்டிக் கிராமத்தில்- புதிதாக நிர் மாணிக்கப்பட்டபொது மண்டபத்திறப்புவிழா நேற்றுக்காலை 10.30 மணியளவில் யாழ்மாவட்டதமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் சு. ஜெயராஜ் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக மங்கல விளக்கினை யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், வடமராட்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா,கரவெட்டி பிரதேச செயலர்-சத்தியசீலன், நிகொட் உதவித்திட்டப் பணிப்பாளர் நவரட்ணராஜா ஆகியோர் ஏற்றி வைத்தனர். புதிய மண்டபத்தினை யாழ். அரசாங்க அதிபர் திறந்துவைத்தார்.

வரவேற்புரையினைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களின் சிறப்புரைகள் இடம்பெற்றன. தொடர்ந்து புதியமண்டபம் அவ்வூர்மக்களிடம் கையளிக் கப்பட்டது.

## பிரதேச செயலர்நியமனம்



கரைதுறைப்பற்றுபிரதேச செயலகத்துக்கு கடந்த முதல் ஆம் திகதி புதியபிரதேச செயலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அம்பலவாணர்-சோதிநாதன் அவர்களே புதிய பிரதேச செயலராக நியமனம் பெற்றுள்ளார்.இவ்வளவு கால மும்கடமையாற்றியதிரு. மு.காசிப்பிள்ளை ஓய்வு பெற்றுச்செல்கின்றார். (20)

## மக்களுக்கு இடையூறாக மீன் வியாபாரம்

வவுனியா புகையிரத வீதியில் மாலைநேரங்களில் மக்களுக்கு இடஞ்சல் ஏற்படுத்தும் வகையில் மாலைநேர மீன் வியாபாரிகள் மீன் விற்பனையில்ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே மாலைநேரங்களில் மீன் விற்பனைக்குஎன்று ஒதுக்கப்பட்ட இடத்தைத் தவிர்த்து நினைத்த இடத்தில் மீன் விற்பனையில் மீன் வியாபாரிகள் ஈடுபட்டு வருவதாகவும் இவர்களுக்கு எதிராக நகரசபை நடவடிக்கை எடுக்குமென்று தெரிவித்திருந்தபோதும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது. நினைத்த இடங்களில் மீன் விற்பனையில் ஈடுபடுவதன் காரணமாக நகர் பகுதிபாதிப்புக்குள்ளாவதாகவும்சுகாதார சீர்கேடுநிலவுவதாகவும்தெரிவிக்கப்படுகிறது.(21)

# கிளி.மாவட்ட பாடசாலைகளில் ருபெல்லா குறித்த கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனையினரால் கிளிநொச்சி பாடசாலைகளில் நேற்று சின்னமுத்து ருபெல்லா நோய்த்தடுப்பு கருத்தரங்கு நடத்தப்பெற்றது.சுகாதாரக் கல்விஉத்தியோகஸ்தர் பிரேம்குமார் கருத்துரைகளை வழங்கினார்.



கிளிநொச்சி மகாவித்தியாலயம், கிளிநொச்சி சென்திரேசா மகளிர் கல்லூரி, கனகபுரம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவமாணவிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு சின்ன முத்து ருபெல்லா என்னும் கொடிய நோய்களிலிருந்து இளம்சந்ததியினரைப் பாதுகாக்கும்வஜகயில் மேற்கொள்ளும் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் இந் நோய்த் தாக்கத்தினால் உடலில் ஏற்படும் பாரிய விளைவுகள் குறித்து கருத்துரை விளக்கங்கள் கொடுக்கப்பட்டதுடன் இன்றும், நாளையும் நடைபெறவுள்ள ருபெல்லா-சின்னமுத்து தடுப்பு மருந்து வழங்கப் பெறும் நிலைகளுக்கு16 தொடக்கம் 21 வயதான ஆண், பெண் இருபாலார்களும் தவறாது சென்று தடுப்பு மருந்தினைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.. (சோ,கு)

## தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல் 2004

மீளளிப்பு நடைமுறைகள்

01. கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகை தந்து கடனை மீளப்பெற வேண்டும்.
02. ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகை தர வேண்டும்.
03. கடன் சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களைப்பின்னுரித்தாளர் கொண்டு வர வேண்டும்.
   * இறப்புச் சான்றிதழ்
   * இறப்புச் சான்றிதழின் படி (பிரதி)
   * கடன் சான்றிதழ்
   * பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்
   * பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்.

4.கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.

05. அ. மீளளிப்பிற்குதேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்

ஆ. அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தின் (2.5அங் 2.0அங், அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும். (யோ.தமிழ்க்குமரன்)

நிதிப்பொறுப்பாளர்
தமிழீழ விடுதலைப்புலிகள்.

# நுணாவில் பிரதான சாலையிலுள்ள கடைகளில் திருடர்கள் கைவரிசை

நுணாவில் மத்திய பிரதான சாலைக்கு அருகில் இருந்த வீடியோக்கடை ஒன்றிலும் அருகில் இருந்த மில் ஒன்றிலும் நேற்று முன்தினம் நள்ளிரவு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது. வீடியோக்கடையில் இருந்து பதிவுக்கருவிகளும்-பதிவு செய்யப்பட்ட படக் கொப்பிகளும் பணமும்மற்றும் அருகில் இருந்த மில்லில் இருந்த திறப்புக்கள் அடங்கிய கோர்வையும், அரைத்து வைக்கப்பட்டமிளகாய்த்தூள் போன்றவற்றையும் திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர். இவர்கள் பின்னர் அருகில் இருந்த வீடுகளில்இருந்த கோழிகளையும் பிடித்துச்செல்ல முற்படுகையில் சத்தம் கேட்டு அருகில் குடியிருக்கும் மக்கள் விழித்துக் கொண்டதால் அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இது குறித்து சாவகச்சேரி பொலிசார் வழக்குப் பதிவுசெய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (28)

## பொலிஸ்மா அதிபர் நியமிக்க நடவடிக்கை

பொலிஸ் மா அதிபர் இந்திராடி சில்வாவுக்கு பதிலாக புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படு வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன. இந்திரா டிசில்வாவின் பதவிக் காலம் எதிர் வரும் 30ஆம் திகதி முடிவடைகிறது. இதனையடுத்து 2005ஆம் ஆண்டு பதவிக்காலம் முடிவடையும் நிலையில் உள்ள சந்திரா பெர்னாண்டோ, காமின் ரன்தெனிய, போதி லியனகே போன்றோரில் ஒருவர் இந்த வெற்றிடத்திற்கு நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.அதேநேரம் உதவி பொலிஸ் மாஅதிபர்களான சிரி சேன ஹெரத், செனவிரட்ண பண்டா, ஜெயந்த விக்கிரமரட்ண, குசும் சிறிகமகே, விக்டர் பெரேரா மற்றும் மஹிந்தபாலசூரிய ஆகியோரும் அடுத்துவரும் பொலிஸ்மா அதிபர் நிலைக்கா சனாதிபதியினால் பொலிஸ் சுயாதீன ஆணைக்குழுவுக்கு பரிந்துரைக்கப்படும்வாய்ப்பை கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.(32)

## ஆங்கில தினப்போட்டி பிற்போடல்

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 14.09.2004. ஆம் நாள் ஒட்டுசுட்டான் ம.வி.இல் நடைபெறவிருந்த முல்லைத்தீவு மாவட்ட மட்ட ஆங்கிலதினப் போட்டி 21.09.2004. ஆம் நாள் செவ்வாய்க் கிழமைக்கு பிற் போடப்பட்டுள்ளது போட்டிகள் யாவும் ஒட்டுசுட்டான் ம.வி.இல் நடைபெறும்.

செ.சிவராசா,
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்விப் பணிமனை,
முல்லைத்தீவு.

(சி.10218)

வன்னியில் முதன்முறையாக.

தமிழீழ மாணவர் அமைப்பும், தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பும் இணைந்து நடாத்தும்

லண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன்

இலவச மழலைகள் கணினிப் பூங்கா

மேற்படி கணினிப்பூங்கா மிகு விரைவில்கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் ஆரம்பிக்கப்படவுள்ளது. விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விபரங்களையும் தமிழீழ மாணவர் அமைப்பு நடுவப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

வயதெல்லை - தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை கல்விகற்கும் மாணவர்கள்.
விண்ணப்ப முடிவுத் திகதி - 20.09.2004
குறிப்பு - விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு 22.09.2004, 23.09.2004 ஆகிய தினங்களில் பி.ப 3.00-5.30 வரை நடைபெறும்.
- மாணவர் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இணைப்பாளர்,
கணினிப்பயிற்சி நிலையங்கள்
தமிழீழ மாணவர் அமைப்பு

(5044)





# ஜகார்த்தாவில் ஆஸி தூதரகமருகே தாக்குதல்
# ஒன்பது பேர் உடல் சிதறிப்பலி; 100பேர் காயம்!

-தலைநகரின் மையம் அதிர்ந்தது

(ஜகார்த்தா)

**இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் அவுஸ்திரேலிய தூதரகம் அருகே கார்க்குண்டு வெடித்தது. இதில் 9பேர் பலியானார்கள். 100 பேர் காயம் அடைந்தனர். இந்தசம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.**



அவுஸ்திரேலிய தூதரகம் அருகே நடைபெற்ற குண்டுத் தாக்குதலையடுத்து அங்கு காவல் கடமையில் ஈடுபட்டுள்ள அவுஸ்திரேலிய இராணுவத்தினரும் இந்தோனேசியப் பொலிசாரும்.

ஜகார்த்தா நகரின் மையப்பகுதியில் அவுஸ்திரேலிய தூதரகம் அருகே ஒருகார் நிறுத்தப்பட்டு இருந்தது. அதில் வைக்கப்பட்டடிருந்த வெடிகுண்டு 'ரிமோட்' மூலம் வெடிக்கச் செய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் காலை 9.50 மணிக்கு இந்த சம்பவம் நடந்தது. இதில் தூதரகப் பாதுகாப்புப்பணியில் இருந்த 3பொலி சார் உட்பட 9 பேர் பலியானார்கள். உடல்கள் சிதறி சாலையில் ஆங்காங்கே கிடந்தன. கிட்டத்தட்ட 100 பேர் காயம் அடைந்தனர்.

குண்டு வெடித்த இடத்தில் 9அடி ஆழத்திற்குப் பள்ளம் ஏற்பட்டது. இதில் தூதரகத்தின் கதவுகளும், இரும்பு வேலியும், கட்டடமும் சேதம் அடைந்தன. கட்டடத்தின் ஜன்னல்கள் உடைந்தன. மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து தூதரக ஊழியர்கள் வேறுஇடத்திற்கு மாற்றப்பட்டனர். தூதரக ஊழியர்கள் யாரும் காயம் அடையவில்லை என்று தூதரக அதிகாரிகள் கூறினர்.

இந்தோனேசியரவில் பாலித் தீவில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவம், ஜகார்த்தாவில் உள்ள மேட்ரியாட் ஓட்டலில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவம் ஆகியவை மாதிரியே இந்தச்சம்பவமும் நடந்துள்ளது.

இந்தக்குண்டு வெடிப்புச் சம்பவம் மலேசியாவைச் சேர்ந்த அசா ஹாரியின் கைவரிசையாக இருக்கும் என்று பொலிசார் சந்தேகிக்கிறார்கள். அல்-ஹைதா இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புடையதும், தென் கிழக்கு ஆசிய நாடுகளில் செயற்பட்டு வருவமதுமான




சேதமடைந்துள்ள தூதரக யன்னல்கள்

ஜெமா இஸ்லாமிய அமைப்பின் மூத்த தலைவர்களில் அசா ஹாரியும் ஒருவராவார். அவரைப் பொலிசார் தேடிவருகிறார்கள். இந்தோனேசிய அதிபர் மேகவதி சுகர்னோபுத்ரி சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டுள்ளார்.

இதேவேளை இந்தோனேசியத் தலைநகரில் அமைந்துள்ள தமது தூதரகத்திற்கு வெளியே நிகழ்ந்த கார்க்குண்டுத் தாக்குதலால் அச்சபடப்போவதில்லை. இதனைக் காரணமாக வைத்து ஈராக்கில் நிலை நிறுத்தப் பட்டுள்ள தமது துருப்புக்களைத் திருப்பியழைக்கும் எண்ணம் கிடையாது எனப் பிரதமர் ஜோன்ஹவாட் தெரிவித்துள்ளார்.

## பேச்சிற்கு முயற்சி

வடகொரியாவின் அணுவாயுதத் திட்டங்களிற்கு முற்றுப்புள்ளி வைப்பது குறித்து ஆராய அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் டோக்கியோ நகரில் கூடியுள்ளனர்.



ஜகார்த்தாவில் கார்க்குண்டு வெடிப்பு இடம்பெற்ற பின்னர் பிலிப்பைன்ஸ் தலைநகரிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக பாதுகாப்பிலீடுபட்டுள்ள படையினர்.

# புஷ் மீதான நம்பிக்கை உலக மக்களிடையே சரிவு!

(வோஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதியாக புஷ் மீண்டும் வருவதை உலக நாடுகளின் பெரும்பாலான மக்கள் விரும்பவில்லை என்று கருத்துக்கணிப்பு தெரிவிக்கிறது. அந்த நாடுகளின் மக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹெரி சனாதிபதி யாவதையே விரும்புகின்றனர்.

அமெரிக்காவின் பாரம்பரிய நட்பு நாடுகளிலும் ஹெரிக்குத்தான் ஆதரவு உள்ளது. உலக நாட்டு மக்களில் கிட்டத்தட்ட 46 சதவீதம் பேர் ஹெரிக்கும், 20 சதவீதம் பேர் புஷ்ஷிற்கும் ஆதரவு தெரிவித்துள்ளனர். பிலிப்பைன்ஸ், நைஜீரியா, போலந்து ஆகிய நாட்டு மக்கள் மட்டுமே புஷ்சுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்தியா, தாய்லாந்து ஆகிய நாட்டு மக்களின் ஆதரவு இருவேட்பாளர்களுக்கும் சரிசமமாகக் கிடைத்துள்ளது.

புஷ்ஷின் வெளிநாட்டுக் கொள்கை தங்கள் உணர்வைப் புண்படுத்தி இருப்பதாக 30 நாடுகளின் மக்கள் தெரிவித்துள்ளனர். குளோப் ஸ்கேன என்ற உலக ஆராய்ச்சி நிறுவனம் மேரிலாண்டு பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பில்தான் இது போன்ற தகவல்கள் கிடைத்துள்ளன.

-உள்நாட்டிலே தயாரிக்கப்பட்ட -

# இரு அறிவியல் செயற்கைக் கோள்களை சீனா விண்ணில் செலுத்தியது

(பீஜிங்)

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இரு அறிவியல் செயற்கைக் கோள்களை சீனா வியாழக்கிழமை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. விண்வெளியின் சுற்றுச்சூழல், கதிரியக்கம் குறித்து ஆராய்வதுடன் தொடர்பான மற்ற பரிசோதனைகளையும் இவை மேற்கொள்ளும்.

சீனாவின் ஷாங்ஸி மாகாணத்தில் உள்ள தைய்வான் செயற்கைக்கோள் ஏவுதளத்தில் 'நீண்ட பயணம் 4-பீ' என்ற ஏவுகணை மூலம் வியாழக்கிழமை காலை 4.44 மணிக்கு இந்த செயற்கைக் கோர்ள்கள் விண்ணில் செலுத் தப்பட்டன. எஸ்ஜே 6-ஏ என்ற முதல் அறிவியல் பரிசோதனை செயற்கைக் கோள் விண்ணில் ஏவப்பட்டதற்குப் பிறகு 11ஆவது நிமிஷத்தில் ஏவுகணையில் இருந்து தனியே பிரிந்தது. எஸ்ஜே 6-பி என்ற இரண்டாவது செயற்கைக்கோள் ஒரு நிமிஷத்துக்குப் பிறகு தனியே பிரிந்தது. இவற்றின் ஆயுட்காலம் 2 ஆண்டுகள். ஷங்காய் விண்வெளிப்பயண தொழில்நுட்ப அமைப்பும் டாங்பாங்ஹாங் செயற்கைக் கோள் நிறுவனமும் இணைந்து இந்த இரு செயற்கைக் கோள்களையும் விண்ணில் செலுத்தின.

# ஜமேக்காவை நேற்று சூறாவளி தாக்கியது 29பேர் பலி; சொத்துகளுக்கும் பலத்த சேதம்!

(கதனகன)

"லிவான்" என்னும் பெயரைக் கொண்ட கடுமையான சூறாவளி ஜமேக்காவை நேற்றுப் பிற்பகல் தாக்கியது. இதனால் குறைந்தது 29பேர் பலியாகினர். கட்டடங்கள் பயன்தருமரங்கள் எனப் பெருமளவு வளங்கள் அழிக்கப்பட்டன.

இந்தத் தீவின் தாழ்நிலப்பிரதேசங்களில் வசிக்கும் 5 இலட்சம் மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டு சில மணித்தியாலங்களில் சூறாவளி குறித்த பகுதிகளைத் தாக்கியது.

ஜமேக்காவில் 27 இலட்சம் பேர் இருக்கின்றார்கள். பலர் திருட்டுகளுக்கு அஞ்சி வீடுகளை விட்டு வெளியேறத் தயங்கியதாக தெரிவிக்கப் படுகின்றது. ஆனால் இந்த "லிவான்" சூறாவளி பேரழிவுகளை ஏற்படுத்தவுள்ள ஆபத்தை அதிகாரிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

மணித்தியாலத்திற்கு 150 மைல் வேகத்தில் நகரும்



இந்த சூறாவளி அமெரிக்காவின் தீவுப்பகுதிகளில் 29 பேரை பலியெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜெயாவின் சொத்து குவிப்பு ஆவணங்கள் பாதுகாப்புடன் கர்நாடகா எடுத்து வருகை

(சென்னை)

பாரஊர்தியொன்றில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் சொத்து ஆவணங்கள் பலத்த



பாதுகாப்புடன் இரவோடு இரவாக பெங்களூர் எடுத்துச் செல்லப் பட்டது.


1991 முதல் 96 வரையிலான காலத்தில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது வருமானத்தை மீறி ரூ.66.65 கோடிக்கு சொத்து சேர்த்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக தி.மு.க ஆட்சியில் அமைக்கப் பட்ட தனி நீதிமன்றில் ஜெயலலிதா அவரது தோழி சசிகலா, முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரன் இளவரசி ஆகியோர் மீது சொத்துக் குவிப்பு வழக்கு போடப்பட்டது. இந்த வழக்குவிசாரணை முடிவடையும் முன்பே மீண்டும் அ.தி.மு.க ஆட்சிக்கு வந்து விட்டது.

இதையடுத்து இந்த வழக்கை வேறுமாநிலத்திற்கு மாற்றுமாறு தி.மு.க பொதுச் செயலாளர் அன்பழகன் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். அதை ஏற்று ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கை கர்நாடகா மாநிலத்தில் நடத்துமாறு சுப்ரீம் கோர்ட்டு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் உத்தரவிட்டது. வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை கர்நாடக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் ஏறத்தாழ ஒரு ஆண்டு ஆகியும் ஆவணங்களை ஒப்படைக்காமல் அ.தி.மு.க அரசு காலம் கடத்தியது. இதனால் ஒரு வாரத்திற்குள் ஆவணங்களை கர்நாடக கோர்ட்டுக்கு ஒப்படைக்குமாறு சுப்ரீம் கோர்ட்டு கண்டிப்பாக உத்தரவிட்டது. இதனையடுத்து இவை எடுத்துச் செல்லப்பட்டன.

## பேச்சுக்களின் முன்னேற்றத்திற்கு ஆலோசனை

(புதுடில்லி)

பாகிஸ்தானிலிருந்து எல்லை கடந்த பயங்கரவாதம் நிறுத்தப்படும் வரை ஜம்மு-காஷ்மீர் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படாது என்று இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் நட்வர்சிங் கூறியுள்ளார். தனியார் தொலைக்காட்சிக்கு நேற்று முன்தினம் அவர் அளித்த பேட்டியின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.



சூடான் டார்பர் பிராந்தியத்திலுள்ள அகதிமுகாமில் வசிக்கும் சிறுவன் (ஏறத்தாழ ஒருலட்சம் பேர் இங்கு அகதிகளாகியுள்ளனர்)

BOC

## இலங்கை வங்கி

# பகிரங்க ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்

இலங்கை வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.06.2003 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு இது வரை மீட்கப்படாத நகைகள் யாவும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்ப்பாணம் மேற்தரக்கிளையில் இம்மாதம் 25ஆம், 26 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறியத் தருகின்றோம்.

யாழ்ப்பாணம் மேற்தரக் கிளை

- யாழ். இரண்டாம் கிளை (ஸ்ரான்லி வீதி)
- பருத்தித்துறை
- மானிப்பாய்
- சுன்னாகம்

**இந்நகைகள் மீட்கப்படவேண்டிய கடைசித் திகதி 24.09.2004 அறிவித்தலின்றி ஏல விற்பனைத் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.**

உதவிப்பொது முகாமையாளர்
[வட பிராந்தியம்– யாழ்ப்பாணம்]

(சி.10217)

# கேள்வி அறிவித்தல்

## கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு
## வடக்கு–கிழக்கு மாகாணம், திருகோணமலை

01 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசானது ஆசிரியர் கல்வி ஆசிரியர் அபிவிருத்தித்திட்டத்தின் செலவுக்காக சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்திலிருந்து கடன் கிடைக்கப்பெற்றுள்ளது. இப்பணத்தில் ஒரு பகுதியைக் கீழே குறிப்பிடப்படும் ஒப்பந்தங்களிற்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. IDRD கடன் மற்றும் IDA கடனின் கீழான விநியோகம்" வழிகாட்டிகள் குறிப்பிடப்பட்டவாறு தகைமையுள்ள நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் சமர்ப்பிக்கப்படலாம். கேள்வித்தரவுகளில் குறிப்பிடப்பட்டவாறு இக்ராட்டுடன் பதிவு செய்த உள்ளூர் நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் கேள்வி சமர்ப்பிக்கலாம்.

02. செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு- கிழக்கு மாகாணம், திருகோணமலை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத்தொகுதிகள் நிர்மாணிப்பதற்கு / புனரமைப்பதற்குக் கோரப்படுகின்றன.

| இல | கேள்விக்குறியீட்டு இல. | வேலைவிபரம் | பதிவுத் தரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| 01 | ரிசரிடி/என்ஈ/முல்/துனு/2004.17 துணுக்காய் | முல்/மாங்குளம் மகாவித்தியாலயம் ஆசிரியர் நிலையம் நிர்மாணித்தல் | எம் 6 | 1000/= |
| 02 | ரிசரிடி/என்ஈ/முல்/முல்/2004.18 முல்லைத்தீவு | முல்/வித்தியானந்தாக் கல்லூரி ஆசிரியர் நிலையம் நிர்மாணித்தல | எம் 6 | 1000/= |
| 03 | ரிசரிடி/என்ஈ/கிளி/கிளி/2004.19 கிளிநொச்சி | கிளி/அக்கராயன் மகாவித்தியாலயம் ஆசிரியர் நிலையம் நிர்மாணித்தல் | எம் 6 | 1000/= |
| 04 | ரிசரிடி/என்ஈ/கிளி/கிளி/2004.20 கிளிநொச்சி | கிளி/பரந்தன் ஆசிரியர் நிலையம் நிர்மாணித்தல். | எம் 6 | 1000/= |
| 05 | ரிசரிடி/என்ஈ/வவு/வவு.தெற்கு/2004.05வவுனியா தெற்கு | வவு/ஆசிரியர் நிலையம், செட்டிகுளம் மகாவித்தியாலயம் முன்னேற்ற வேலை. | எம் 8 | 750/= |
| 06 | ரிசரிடி/என்ஈ/மட்/மட்/2004.13 மட்டக்களப்பு | மட்டு/ஆசிரியர் நிலையம், காத்தான்குடி மகாவித்தியாலயம் கிணறு, தண்ணீர் தாங்கி நிர்மாணித்தலும் முன்னேற்ற வேலையும். | எம் 8 | 750/= |

03 மீளளிக்கப்படாத கட்டணம் மேற்குறிப்பிட்டுள்ளவாறு அந்தந்த வலயக்கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தில் செலுத்தி 2004.10.07 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப்பொதிகளுக்கான கேள்வி ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம்.

04. கேள்வி திறக்கப்பட்டதிலிருந்து கேள்வி 90 நாட்களுக்கும், கேள்விப்பிணை 120 நாட்களுக்கும் செல்லுபடியானதாக இருக்க வேண்டியதோடு ஒவ்வொரு கேள்வியும், கேள்வித்தரவில் குறிப்படப்பட்ட கேள்விப்பிணை இணைக்கப்பட்டு 2004 10.11 பிற்பகல் 3.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், கேள்விச்சபை, கல்விப்பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை , இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரில் அனுப்பப்படல் வேண்டும்.அதேநேரம் கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி முன்னிலையில் இக்கேள்விகள் திறக்கப்படும்.

05 ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை அந்தந்த வலயக்கல்விப் பணிமனைகளில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். தியாகலிங்கம்,
தலைவர்/செயலாளர்,
அமைச்சு கேள்விச்சபை,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

(சி-10214)

# வடக்கு கிழக்கில் கணினி அறிவில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் லண்டன் ரி.ஆர்.டெக் அமைப்பு தீவிரம்

(திருகோணமலை)

**வடக்கு கிழக்கு மாகாணத்தில் கிராமிய மாணவர்கள் மத்தியில் கணினி அறிவில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்றிட்டத்தை லண்டன் ரி.ஆர்.டெக் அமைப்பு மேற்கொண்டுள்ளது.**

இதன் முதற்கட்டமாக திருகோணமலை ஐ.ரி. டெக் அமைப்புடன் இணைந்து கணினிப் பயிற்சி நிலையங்களைத் திறந்து வருகிறது. கடந்த வியாழக்கிழமை நிலாவெளி தமிழ் மகாவித்தியாலயத்திலும், தம்பலகமம் ஆதிகோணேஸ்வரா மகாவித்தியாலயத்திலும் இரு கணினிப் பயிற்சி நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன. இந் நிகழ்வுகளில் பொருண்மிய மேம்பாட்டுப் பணிப்பாளர் எஸ்.திலக் பங்கு பற்றிப் பேசும் போது வடக்குகிழக்கு மாகாணத்தில் ஐம்பது பாடசாலைகளில் 5000 மாணவருக்கு கணினி அறிவை இலவசமாகப் புகட்டும் திட்டத்தின் முதற்கட்டமாக நிலாவெளியிலும், தம்பலகமத்திலும் கணினிப்பயிற்சி நிலையங்கள் திறந்து வைக்கப் படுவதாகத் தெரிவித்தார்.

நிலாவெளி தமிழ் மகாவித்தியாலயம், தம்பலகமம் ஆதிகோணேஸ்வரர் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் தலா 100 மாணவர்கள் கணினி அறிவைப் பெறும் வகுப்புக்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

நிலாவெளி தமிழ் மகாவித்தியாலயத்தில் கணினிப்பயிற்சி நிலையத்தை லண்டன் ரி.ஆர். டெக் அமைப்பின் நிறுவன உறுப்பினர், விஜயதேவா திறந்து வைத்தார். பொருண்மிய மேம்பாட்டுப் பணிப்பாளர் எஸ்.திலக் முக்கிய உரை நிகழ்த்தினார்.

தம்பலகமம்ஆதிகோணேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் நடந்த கணினிப்பயிற்சி நிலையத்தை பணிப்பாளர் சுந்தர மூர்த்தி திறந்து வைத்தார். (25)

# திருடப்பட்ட 2 கணினிகள் காவல்துறையால் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

மனித நேய கண்ணி வெடியகற்றும் பிரிவினருக்குச் சொந்தமான இரண்டு கணினிகள் விசமியொருவரால் திருடப்பட்டு தமிழீழ காவல்துறையினரால் மீட்கப் பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி தாளையடிப் பிரதேசத்தில் கண்ணி வெடியகற்றும் பிரிவினரால் வேலைத் திட்டத்திற்காகப் பயன்படுத்திவிட்டு வைத்திருந்தவேளை இரண்டு கணினிகளும் அதற்குரிய பாகங்கள் சிலவற்றையும் இரவு வேளை விசமியொருவுரால் திருடப்பட்டுள்ளது. 8ஆம் திகதி இரவு கிளிநொச்சியினூடாக அவ்விரண்டு கணினிகளையும் கொண்டு செல்ல முற்பட்டபோது அன்றைய தினம் இரவு குற்றத் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காவல்துறையினர் இரவு ஒரு மணியளவில் ஏ-9 வீதியால் பயணித்த நபரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்ட வேளை பொருட்களுடன் அவர் கைது செய்யப்பட்டார்.

இவர் காவல் துறையினரின் விசாரணையின் பின் நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளார். இதேவேளை கிளிநொச்சி உருத்திரபுரம் மற்றும் ஏனைய பகுதிகளில் குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கில் இரவு வேளைகளில் தமிழீழ காவல்துறையினர் நடவடிக்கையிலீடுபட்டு வருவதோடு பல குற்றச் செயல்களை இனங்கண்டு நடவடிக்கையெடுத்தும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச.தீ)

# ஆபத்தை விளைவிக்கும் பன்றி நெல்லை அழிக்குக!

*கிளி. உதவி விவசாயப் பணிப்பாளர் அறிவுரை*

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நெல் வயல்களிலும், விநியோக வாய்க்கால் கரையோரங்களிலும் சிறுபோகம் 2004 பயிர்செய்கை காலத்தில் "பன்றிநெல்" இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக முரசுமோட்டை, புலிங்கதேவன் முறிப்பு, சேற்றுக்கண்டி, மகிழங்காடு, குஞ்சுப்பரந்தன் ஆகிய இடங்களில் அதிகமாகக் காணப்பட்டது. இந் நெல் நெல்லின் தரத்தை மிகவும் குறைவடையச் செய்யும். அத்துடன் கபில நிறத்திற்கு விருந்து வழங்கியாக இருக்கும். இது மாவட்டத்தில் பரவினால் விவசாயிகளுக்கும், சூழலுக்கும் பேராபத்தை விளைவிக்கும். இதனை மேலும் பரவவிடாது அழிக்குமாறு அவ்வப்பகுதி திட்டக்குழுக்களையும், விவசாய அமைப்புக்களையும், சம்பந்தப்பட்ட விவசாயிகளையும் கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

# வற்றாப்பளை இளைஞர்கள் இருவர் முகமாலையில் இராணுவத்தால் கைது

(தென்மராட்சி)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வன்னிப் பகுதியிலிருந்து முகமாலை இராணுவச் சோதனைச்சாவடியூடாக நேற்று முன்தினம் [illegible] யாழ். குடாநாட்டினுள் புகமுற்பட்ட இளைஞர்கள் இருவர் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பின்னர் இவர்கள் இருவரும் கொடிகாமம் பொலிசாருடாக நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர். ஒன்றிற்கு மேற்பட்ட தேசிய அடையாள அட்டைகளை வைத்திருந்ததாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை, வற்றாப்பளைப் பகுதியைச் சேர்ந்தவர்களான செபஸ்தியாம்பிள்ளை ஜேசுதாசன் மற்றும் அதே இடத்தைச் சேர்ந்த ஜெயராஜ் அன்ரனிதாஸ் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இவர்கள் இருவரையும் தலா பத்தாயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல சாவகச்சேரி நீதவான் பா.சுப்பிரமணியம் அனுமதித்துள்ளார்.

எனினும் இவர்களை பிணையில் பொறுப்பேற்க எவரும் நீதிமன்றில் ஆஜராயிராத நிலையில் அவர்களை யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(27)

## கலந்துரையாடல்

தமிழீழ விளையாட்டுத் துறையின் ஒழுங்குபடுத்தலின் கீழ் முல்லை மாவட்ட கழகங்களுக்கான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 18-09-2004 அன்று கரைதுறைப்பற்றுப் பிரதேசச் செயலர் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்து விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்கள், அந்தந்தப் பகுதி விளையாட்டுத்துறை அதிகாரிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு முல்லை மாவட்ட விளையாட்டு அதிகாரி, முல்லை மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் கேட்டுக் கொள்கின்றனர். (20)

# தமிழ்க் கூட்டமைப்பினரின் திருமலை விஜயம் பிற்போடப்பட்டது

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் செப்ரெம்பர் 11,12,13 ஆம் திகதிகளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 22பேராலும் கிராமங்கள்,பட்டினங்களில் மேற்கொள்ளப்படவிருந்த விழிப்புணர்வுப் பிரச்சாரக் கூட்டங்கள், கருத்தரங்குகள் பிற்போடப்பட்டுள்ளன. வேறொரு திகதி நிர்ணயிக்கப்பட்டு இப்பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு மலசலகூடங்கள் அமைப்பு

(மல்லாவி)

முல்லை மாவட்ட மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் பாண்டியன் குள துணுக்காய் அபிவிருத்திக் கழகம் கெயார், நிகொட் திட்டத்தின் கீழ் கரும்புள்ளியான் கிராமத்திலும், விநாயகர்புரம் கிராமத்திலும் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கையாக மலசலகூடங்கள், குடிநீர்க் கிணறுகள், விவசாய உதவிகள் என்பனவற்றை செய்து வருகின்றனர். (24)

# யுத்த காலக்கோரக்காட்சிகளாகவே வீதிவிபத்துப் புகைப்படங்களும் உள்ளன

**வீதிவிபத்துப் புகைப்படக் கண்காட்சியில் வணபிதா அன்ரனிசுதா**

யுத்த காலத்தில் ஏற்பட்ட கோரக்காட்சிகளைப் போலவே வீதிவிபத்துப் புகைப்படக் காட்சிகளும் காணப்படுகின்றன என மாங்குளம் தென்னிந்திய திருச்சபையின் வணபிதா அன்ரனிசுதா அடிகள் கூறியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை மாங்குளம் மகாவித்தியாலயத்தில் தமிழீழ காவல்துறையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட வீதிவிபத்து புகைப்படக் கண்காட்சி நிகழ்வின் போது உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அன்றைய நிகழ்வுகளில் ஈகச்சுடரினை மாங்குளம் மகாவித்தியாலய அதிபர் திருமதி. செல்வராணி ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை காவல்துறை ஆளணிப்பிரிவுப் பொறுப்பாளர் கலையரசன் ஏற்றிவைத்தார். கருத்தூட்டல் நிகழ்வுகளை முல்லை மாவட்டக் காவல் பணிமனைக் கண்காணிப்பாளர் இ.ரஞ்சித்குமார் ஆரம்பித்து வைக்க வீதிப்போக்குவரத்து தொடர்பான கருத்துக்களை ஆளணிப்பொறுப்பாளர் கலையரசன், மாங்குளம் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் அழகன் ஆகியோர் நிகழ்த்தினர்.

கருத்தூட்டல் பாடங்களையும், செய்முறைப் பரீட்சைகளையும் காவல்துறை பயிற்சி ஆசிரியர் செல்வி. இமாக்குலேட், துணுக்காய் காவல் பணிமனைப்பொறுப்பாளர் தி.பகீரதன், மாங்குளம் காவல் பணிமனைப்பொறுப்பாளர் மா.லோகநாதன் ஆகியோர் வழங்கினர். இதனைத் தொடர்ந்து புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

இறுதியாக ஆசிரியர்களுக்கும், உயர்வகுப்பு மாணவர்களுக்கும் வீதியில் அதிவேகமாகச் செல்லும் வாகனங்களை கண்டு பிடிப்பதும் கட்டுப்படுத்துவதும் தொடர்பான செய்முறைக் காட்சி ஏ-9 வீதியில் செய்து காண்பிக்கப்பட்டது. இதன் பின்னர் பகல் 12.00 மணி முதல் கனகராயன் மகாவித்தியா லயத்தில் கருத்தூட்டல் நிகழ்வும், புகைப் படக் கண்காட்சியும் நடாத்தப் பட்டது.

இந்நிகழ்வுகளில் 700 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றி பயன்அடைந்தனர்.

மேலும் ஏ-9 வீதியின் ஓரமாக உள்ள பாடசாலைகளில் அதிபர்களும், ஆசிரியர்களும், மாணவத் தலைவர்களும் காவல்துறை மேலாளர்களுடன் கலந்துரையாடினார். இதன் போது அவர்கள் தெரிவிக்கையில், ஏ-9 வீதி திறக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து விட்டநிலையிலும் பாடசாலைகள் முன்பாக அமைக்கப்படவேண்டிய வீதிக்குறியீடுகள் எதுவும் இதுவரையும் நிறுவப்படவில்லை எனவும் சில பாடசாலைகளுக்கு முன்பாக ஏ-9வீதியில் பாதசாரிகள் கடவைகள் குறிக்கப்பட்ட போதிலும் பாதசாரிகள் கடவைகளை உத்தரவாதப்படுத்தக்கூடிய குறியீடுகள் நிறுவப்படாததால் ஒவ்வொருநாளும் மாணவர்களுக்கு பாதசாரிக் கடவைகள் மரணப்பொறியாகவே உள்ளதென விசனம் தெரிவித்ததுடன் கடந்த காலத்தில் மாங்குளம் மகாவித்தியாலய மாணவி ஒருவர் பாடசாலை முன்பாக வைத்து பாரவூர்தியால் மோதப்பட்டு மரணமடைந்ததையும் சுட்டிக்காட்டியுள்ளனர். மேலும் இக்கருத்தூட்டல் நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமகாலத்திலேயே காவல் துறை அணிகள் ஏ-9 பிரதான வீதியில் விபத்துத் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் வீதி ஒழுங்கு விதிகளை மீறிய சாரதிகள் மீது சட்ட நவடிக்கை எடுக்கப்பட்டது.

# இடைக்காலத் தீர்வை வழங்காத அரசு இறுதித்தீர்வை எவ்வாறு வழங்கும்

## -தி.மகேஸ்வரன் கேள்வி

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை வழங்க முடியாத அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இறுதித்தீர்வைப் பெற்றுக் கொடுப்பது எவ்வாறு என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தியாகராசா மகேஸ்வரன் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அரசாங்க சேவை சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பான யோசனைகள் குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு உயர்வடைவதற்கு ஏற்ப அரசாங்கம் மற்றும் தனியார் துறையினர், தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் வலியுறுத்தினார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை நாளொன்றுக்கு 500 ரூபாய் வரை அதிகரிக்க வேண்டும் என்று அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.


# இ.தொ.காங்கிரசிற்கு விரைவில் அமைச்சுப்பதவி

அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரசிற்கு அமைச்சர் பதவி ஒன்றையும், இரண்டு பிரதியமைச்சர் பதவிகளையும் வழங்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட அமைச்சு மற்றும் பிரதியமைச்சுப் பதவிகளுக்காக சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளப்படும் திகதி குறித்து குறிப்பிட்டுக் கூறமுடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் மங்களசமரவீர தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச் சரவைப் பேச்சாளர் சத்தியப் பிரமாணம் விரைவில் இடம்பெறும் என்று தெரிவித்துள்ளார்.

# ஜப்பானின் சீக்கோ எப்சன் நிறுவனத்தின் பறக்கும் றோபோ



ஜப்பானின் சீக்கோ எப்சன் நிறுவனம் புதிதாக பறக்கும் றோபோவைத் தயாரித்து வெளியிட்டுள்ளது.

அணுசக்தி மூலம் இயக்கும் இச்சாதனம் மக்களை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. இதன் நிறை 12.3 கிராம். இது தானியங்கி இயந்திரமாகும். இதற்காக தயாரிக்கப்பட்ட மின் கலங்களின் (Battory) உதவியுடன் இது இயக்கக் கூடியது.

இது பறப்பில் ஈடுபடும் போது படமெடுத்து புவிக்கு அனுப்பும். ஏதாவது தேடுதலில் அல்லது ஆபத்தில் மக்களைக் காப்பதில் இது கைகொடுக்கும். தேடுதலில் வெற்றிகாணப்பட்டால் அதன் இரு சிறிய இயந்திரங்கள் சங்கேத ஒலியை எழுப்பும்.

இந்த றோபோ உலங்குவானூர்தி ஒரு சிறு குவளையை விடச் சிறியதாகும். புவிநடுக்கம், வெள்ளப்பெருக்கு, சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களால் மக்கள் காணாமற் போகும் சந்தர்ப்பங்களில் இது தேடுதல் பணிகளை மேற்கொள்ளவல்லது.

இதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட இவ்வகை றோபோ 10 கிராம் நிறையைக் கொண்டிருப்பினும் அதற்குத் துணையான வேறொரு இயந்திரம் வெளியிணைப்பு மூலம் பொருத்தப்பட்டிருந்தது.

தற்போது தயாரிக்கப்பட்டுள்ள இவ றோபோ உலங்குவானூர்தி FR-11 ரக டின்கலன்களின் உதவியுடன் 3 நிமிடங்கள் வானில் பறக்கக் கூடியது.

இது முன்பு வடிவமைக்கப்பட்டதைவிட நிறை சற்றுக் கூடினாலும் அதற்குப் பொருத்தப்பட்ட கருவிகளை நோக்கும்போது அவ்வளவு பொிய நிறை கூடியதாகக்கொள்ள முடியாது.

சீக்கோ நிறுவனம் கைக்கடிகாரத்துக்குப் பெயர் பெற்றதாகும். அது உற்பத்தித் துறையிலும் கண்டுபிடிப்புகளிலும் விருத்தியடைந்து தற்போது இவ்வகை றோபோக்களையும் தயாரிக்கின்றது. கடிகாரத்தைப் போன்ற வட்டமான கட்டுப்பாட்டுக் கருவியே இந்த றோபோ அந்தரத்தில் எழ உதவுகிறது. அத்துடன் தெளிவான படங்களை எடுத்து பூமிக்கு அனுப்புவதிலும் இந்த வட்ட வடிவான கருவி செயற்படுகிறது என்று இதனைத் தயாரித்த நிறுவனம் தெரிவிக்கின்றது.

இதற்கு முன்பு 1992 ஆம் ஆண்டு இவ்வகை றோபோ ஒன்று தயாரிக்கப்பட்டது. எனினும் அது பறக்கக்கூடியதாக இருக்கவில்லை. FR-11 ரக இந்த றோபோ துரித தொழில் நுட்பக்கலையின் சிறந்த பெறுபேறாகும்.

# மீனின் கல்லீரலிலிருந்து மருந்து தயாரிப்பு

இன்ரநெஷனல் வேர்க்ஸ் ரெக்னோ லொஜி என்பது கனடாவைச் சேர்ந்த சிறிய கம்பனி. வான்கூவர் நகரை மையமாகக் கொண்டு செயற்பட்டுவரும் இந்தக் கம்பனி இன்று தன்னுடைய கண்டுபிடிப்பு மூலம் உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. பசுபிக் கடற்பகுதியில் ப்ளோபிஷ் என்ற மீன்கள் காணப்படுகின்றன. அதி பயங்கர விஷத்தன்மை கொண்ட இந்த மீனில் இருந்து மேற்கண்ட சிறிய கம்பனி வலி நிவாரண மருந்து தயாரித்து சாதனை படைத்துள்ளது. இந்த வலி நிவாரண மருந்து தற்காலிகமாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும், ஹெரொயின் உள்ளிட்ட போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்பதற்கும் சிறந்த வகையில் பயன்படுகின்றது. இந்த மருந்து இன்னும் மூன்று ஆண்டுகளுக்குள் சந்தைக்கு விற்பனைக்கு வரும் என்றும், அதற்கு முன்பு பல சுற்றுப் பரிசோதனைகள் நடத்த வேண்டியுள்ளது என்றும் இந்தக் கம்பனி கூறியுள்ளது. ப்ளோபிஷ் மீனின் கல்லீரல், சிறு நீரகங்கள் போன்ற பகுதிகளில் இருந்து பெறப்படும் இந்த விஷம் சயனைட்டை விடக் கொடியது. இந்த விஷத்தின் ஒரு சிறிய துளி பட்டால் போதும் அந்த உயிருக்கு சாவு உறுதி. அப்படிப்பட்ட கொடிய விஷத்தில் இருந்து டெடரோடோடாக்சின் என்ற மருந்தைத் தயாரித்துள்ளனர். வலியால் அவதிப்படும் நோயாளிகளுக்கு இந்த மருந்தில் ஒரு சில மைக்ரோ கிராம் அளவுக்கே தரப்படுகின்றது. இதனை நாம் சாதாரண கண்களால் பார்க்க முடியாது. தொடர்ந்து 2 முதல் 4 நாட்கள் வரை இந்த மருந்தைக் கொடுத்தால் போதும் 70 சதவீதம் நிவாரணம் கிடைக்கும். மற்ற மருந்துகளைப் போல (உதாரணமாக மோர்பைன்) பக்க விளைவுகளை உண்டாக்காது. இந்த மருந்து நரம்புகளில் உண்டாகும் வலியை உணர்த்தும் சிக்னல் கள் மூளையைச் சென்றடையாத வண்ணம் தடுத்து விடுகின்றது. இதனால் வலி குணமாகும்.

ஒவ்வொரு மீனின் சிறு நீரகங்கள், கல்லீரல் மற்றும் மீண்டும் உற்பத்தியாகும் உறுப்புக்களிலிருந்து 600 டோஸ் மருந்து தயாரிக்க முடியும் என்பதால் மருந்துக்குத் தட்டுப்பாடு இருக்காது என்றும் இந்தக் கம்பனி கூறியுள்ளது.

# பன்றியின் உறுப்புக்கள் மனிதனுக்கு

மனிதர்களின் உடலுறுப்புக்கள் பாதிக்கப்பட்டால் அவற்றை அகற்றிவிட்டு மாற்று உறுப்புக்கள் பொருத்தப்படுகின்றன. ஆனால் மாற்று மனித உறுப்புக்களுக்கு உலகம் முழுவதும் பெரும் தட்டுப்பாடு உள்ளது. இதைத் தவிர்க்க மாற்று உறுப்புக்களாக பிராணிகளின் உடலில் இருந்து அகற்றப்படும் உறுப்புக்களை பயன்படுத்தும் வழக்கம் உள்ளது. இப்போது புதிய ஆராய்ச்சி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதன்படி பன்றிகளின் உடலிலிருந்து அகற்றப்படும் உறுப்புக்கள் மனிதனின் உடலில் பொருத்தப்பட்டால் அதில் அவ்வளவான எதிர்விளைவோ பிரச்சினையோ எழாதென்று தெரியவந்துள்ளது. மற்றப்பிராணிகளின் உறுப்புக்களை விட பன்றியின் உறுப்புக்கள் மனித உடலில் பொருத்த ஏற்ற உறுப்புக்கள் ஆகும்.

## அதிக ஓசை நுரையீரலைப் பாதிக்கும்

அதிக ஓசை வெளிப்படும் இசை நிகழ்ச்சியைக் கேட்கும் போது நமது காதுகள் மட்டும் பாதிப்படைவதில்லை. நமது நுரையீரலும் பாதிக்கப்பட்டு மூச்சுத் திணறல் ஏற்படுகின்றது. நுரையீரலைச் சுற்றியுள்ள மெல்லிய திசுக்களிற்கிடையே காற்று வேகமாக நுழைகிறது அப்போது திசுக்கள் மற்றும் நுரையீரல் சுவர்கள் பாதிப்படைகின்றன. கார்களில் இசைகேட்க ஸ்டீரியோக்கள் உள்ளன. ஆயிரம் வோல்ட் சக்தியுள்ள ஒலிபெருக்கி மூலம் இசை ஒலி வெளிப்படும் போது அதுவும் அருகிலிருந்து கேட்பவரின் நுரையீரலைப் பாதிப்பதாக டாக்டர்கள் எச்சரித்துள்ளனர்.

## குடிப்பழக்கத்தை மறக்க மாத்திரை

மதுவுக்கு அடிமையாகி நீண்ட போராட்டத்துக்குப் பின் அதிலிருந்து மீண்டு வந்தவர்கள் பலர் சூழ்நிலை காரணமாக மறுபடியும் அப்பழக்கத்திற்கு அடிமையாகின்றனர். இது போன்றவர்களை மீட்கும் புதிய ரகமாத்திரை உருவாக்கப்பட்டுள்ளது. 'கேம்பரல்' எனப்படும் இந்த மாத்திரை அண்மையில அமெரிக்காவில் சோதனை செய்யப்பட்டு கடைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாத்திரையைப் பயன்படுத்தும் முதல் சில நாட்களில் தலைசுற்றல், வாந்தி ஏற்படலாம். ஆனால் ஒரு சில நாட்களில் இவை மறைந்து மிகக் குறிப்பாக 'குடிக்கவேண்டும்' என்ற எண்ணமும் அடியோடு மறைந்துவிடுகிறது. சுமார் ஒரு மாதகாலம் இந்த மாத்திரைகளை விழுங்கவேண்டும்.



டோக்கியோவில் ஹொண்டா நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ள றோபோ, அணி நடை ஒன்றை வழிநடத்திச் செல்கின்றது

# உயிர்ச்சத்து—ஈ காப்பாற்றாது!

ஆன்டி ஆக்ஸிடென்டுகள் நிறைந்த உணவை உண்டால் இருதய நோய் ஏற்படும் அபாயம் தடுக்கப்படும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.ஆனால் ஆன்டி ஆக்ஸிடென்டுகளில் ஒன்றான உயிர்ச்சத்து ஈயில் அந்த ஆற்றல் இல்லை என்று அமெரிக்க ஆராட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். ஒரு இலட்சம் பேரிடம் நடத்தப்பட்ட 7 ஆய்வுகளில் 6ஆய்வுகள் உயிர்ச்சத்து-ஈ இருதய நோயைத் தடுப்பதில் எந்த ஆற்றலும் பெற்றிருக்க வில்லை என்று தெரிய வந்துள்ளது.

இதற்கு மாறாக அஸ்பிரின் கொலஸ்ட்ரோலைக் குறைக்கும் ஸ்டேடின்கள், பீட்டா பிளாக்கர்ஸ், ஏ.சி.இ இன்ஹிபிடர்ஸ் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம் என்றும் இவை இருதய நோய் ஆபத்தைக் குறைக்கும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

# புதிய விலங்கு



பார்த்தவுடன் டைனோசரோ என்று பதறவைக்கும் இந்த விலங்கின் பெயர் பாங்கோலின்! ஹூப்ளி நகரில் ஒரு வீட்டுக்குள் கண்டு பிடிக்கப்பட்ட இந்த விலங்கு அந்தப்பகுதியில் உள்ள மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த விலங்கின் தன்மைகள் பற்றி செய்திகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

# மூலிகை மருத்துவக் குறிப்புக்கள்சில.

*(Herbal Medicine)*

**01.நீரிழிவு நோய்க்கு:- DIABETIES**

*.இந்நோயுள்ளவர்கள் தங்கள் உணவில் தினசரி அல்லது அடிக்கடி வெந்தயக் கீரையைச் சேர்த்து உண்டு வந்தால் நீரிழிவு நோயைக்கட்டுப்படுத்தலாம்.

*.10 நாவற்பழ விதைகளை எடுத்து இடித்துத் தண்ணீரில் போட்டுச் சுண்டக்காய்ச்சி எடுத்து ஒரு நாளைக்கு காலை, மாலை என இருவேளை பருகுவதால் நீரிழிவு படிப்படியாகக் குணமாகும்.

**02.மூட்டு வலி நோய்க்கு (artheritis)** மீனெண்ணெய்யை காலை, மாலை என இருவேளை ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பி[illegible]வதுடன் சிறிது எண்ணெய் வலி[illegible]ள மூட்டுக்கள் மீதும் தட[illegible]வந்தால் மூட்டுவலி படிப்[illegible]யாகக் குணமாகும்.

* [illegible]ஸ்தூரி மஞ்சள் ஒன்று, சிறித[illegible]நீர், சாம்பிராணி ஒரு தேக்கரண்டி கடுகு ஆகிய மூன்றையும் நீர்சேர்த்து அரைத்து, மண்சட்டியில் போட்டு சூடாக்கி கை பொறுக்கும் பக்குவத்தில் எடுத்து வலியுள்ள மூட்டுக்கள் மீது பற்றுப் போட்டுவர மூட்டுவலி படிப்படியாகக் குணமாகும்.


**3.குடற்புண் நோய்க்கு (ULCER)**

*.இந்நோயுள்ளவர்கள் நாள் தோறும சிறிதளவு அகத்திக்கீரையைச் சமைத்துச் சாப்பிட்டுவந்தால் குடற்புண் படிப்படியாகக் குணமாகும்.

*.காலை உணவிற்குப்பின் இளநீரைப் பருகிவருவது குடற் புண்ணை ஆற்ற சிறந்த மருந்தாகும்.

குப்பை மேனி இலை, கீழ்க்காய் நெல்லி இலை அத்தி இலை, வேப்பிலை இந்நான்கு வகைகளையும் சம எடை அளவில் கலந்து. மாத்திரை தயாரித்து முறைப்படி செய்து தினமும் காலை பகல் இரவு மூன்று வேளையும் உணவின் பின் 1 இற்கு 3 மாத்திரைகளை விழுங்கி வருதல் வேண்டும். உணவிற்குப் பின்பும் 1 இற்கு 1 கப் தயிரில் 1/2 தேக் கரண்டி வெந்தயத்தை வறுத்து இடித்துப் பொடி செய்து தினமும் காலை வெந்தயப் பொடி போட்டு கலக்கிக் குடிக்க வேண்டும் இது போல ஒரு மாதகாலம் சாப்பிட்டால் வயிற்றுப் புண் பூரணகுணமாகும்

## புதிய மின்கலம்




செல்லிடத்தொலைபேசி களுக் காக நீண்ட நாள் பாவனைக்கேற்றவாறு ஜப்பானிய பிஜிட்சு நிறுவனத்தால் வடிவ மைக்கப்பட்ட மின்கலம். எதிர்காலத்தில் உலங்கு வானூர்திகளுக்கும் இவை பொருத்தக்கூடிய ஆய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

# அமெரிக்கா; செப்ரெம்பர்-11

செப்ரெம்பர் 11 என்பது அமெரிக்க மக்களைப் பொறுத்த வரை ஒரேயொரு அர்த்தம் கொண்டதாக தற்பொழுது மாறியுள்ளது. இந்நாளை அமெரிக்க வரலாற்றின் பயங்கர நாளாகவும், மறக்க முடியாத ஒரு நாளாகவும் அவர்கள் கருதுகின்றனர். 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் மீது அடுத்தடுத்து இரண்டு விமானங்கள் நடாத்திய தாக்குதலும், அதனைத் தொடர்ந்து வானுயர்ந்த அக்கட்டடம் தரைமட்டமாகியதுமான அந்த நாளை மக்கள் மறக்க முடியாது திணறுகின்றனர்.

இன்று இத்தாக்குதல் நடந்து மூன்று வருடங்களாகின்றபோதும் இத்தாக்குதல் கொடுத்த அதிர்ச்சியானது இன்னமும் அவர்கள் மத்தியில் இருந்து அகலவில்லை என்பது மட்டுமல்ல, அவ்வாறானதொரு தாக்குதல் நடைபெறக் கூடுமோ என்றொரு அச்சமும் இம்மக்கள் மத்தியில் நிலவவே செய்கின்றது.



அன்றைய தினம் காலை 8.47 மணியளவில் 1360அடி உயரமான ஒரு கோபுரத்தின் மீது 90 பயணிகளுடன் கடத்தி வரப்பட்ட விமானம் ஒன்று மோதியதுடன் ஆரம்பமாகிய இப்பயங்கர நிகழ்வில் மொத்தம் 3025 பேர் பலியாகியதாக அல்லது காணாமற்போனதாக உத்தியோகபூர்வத் தகவல்கள் கூறுகின்றன. இவர்களில் 343 பேர் தீயணைப்புப் படை வீரர்கள் ஆவர்.


இச்சம்பவத்தின் எதிரொலி இன்னமும் அமெரிக்காவில் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு. புஷ் "தீர்ப்பு வழங்கப்படும்" என்றார். அத்துடன் "எமது எதிரிகள் எதனை ஆரம்பித்து வைத்தனரோ அதனை நாம் முடித்து வைப்போம்" என்றார்.

இந்தச் சம்பவத்திற்குக் காரணமாக அல்-ஹைதா அமைப்பும் அதன்தலைவர் பின்லேடனும் குற்றம் சுமத்தப்பட்டனர். அதேவேளை, ஒட்டுமொத்தமாக "இஸ்லாமிய பயங்கரவாதம்" மீது அமெரிக்க அரசாங்கத்தின் கோபம் திரும்பியது. அமெரிக்காவின் இந்தக் கோபத்திற்கு முதலில் இலக்காகியது ஆப்கானிஸ்தான் ஆகும். இந்தத் தாக்குதலின் சூத்திரதாரி என அறிவிக்கப்பட்ட ஒசாமா பின்லேடன் அன்றைய ஆப்கானிஸ்தான் ஆட்சியாளர்களாகிய தலிபான்களின் உதவியுடன் அங்கு ஒளிந்திருப்பதாக அறிவித்த அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்து, அதனைக் கைப்பற்றி, நிலை கொண்டுள்ளது.

இன்றும் ஒசாமா பின்லேடன் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் எல்லைப் புறங்களில் எங்கோ மறைந்திருப்பதாகவே அமெரிக்கா நம்பி வருகின்றது.

இதேவேளை, பாகிஸ்தானிலும், அதன் எல்லைப்புறங்களிலுமுள்ள மசூதிகள், இஸ்லாமியப் பாடசாலைகளில் ஒசாமா பின்லேடனுக்கு ஆதரவான போக்கு தொடர்வதாக மேற்குலக ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர். அதற்கு ஆதரமாக ஒசாமா பின்லேடனின் படங்கள், படம் பொறித்த பொருட்கள் விற்பனையாவதைச் சுட்டிக் காட்டுகின்றனர். இதே வேளை, இஸ்லாமிய தீவிரவாதத்தின் ஊற்று என அமெரிக்கா கருதிய ஈராக் மீது அமெரிக்கா பாரிய இராணுவ நடவடிக் கையை எடுத்து, அங்கு நிலை கொண்டிருக்கிறது.

பல்வேறு குற்றச்சாட்டுக்களை ஈராக்கிய முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைன் மீது முன்வைத்து இந்த இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்தபோதும் அக்குற்றச்சாட்டுக்களின் நம்பகத் தன்மை தொடர்பான சந்தேகம் அமெரிக்கா மீது எழுந்துள்ளது.



குறிப்பாக, பேரழிவு ஆயுதங்கள் ஈராக்கில் உள்ளதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது ஈராக்கை அமெரிக்கா கைப்பற்றியபோதும் நிரூபிக்கப்பட்டுவிட வில்லை. இது அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் பாரிய வாதப் பிரதிவாதங் களை கிளப்பியுள்ளது.

இதேவேளை, ஈராக் மீது படை யெடுத்து அதனை அமெரிக்க கைப்பற்றியுள்ள போதும் அமெரிக்கப் படைகள் அண்மையில் சந்திக்கும் இழப்புக்கள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன. ஈராக் வெற்றி கொள்ளப்பட்டதாக அமெரிக்கா அறிவித்த பின்னர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அமெரிக்கப் படைகள் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் ஈராக்கில் அமெரிக்கப் படைகள் மீது தொடர்ச்சியாக நடாத்தப்படும் தாக்குதல்கள் ஏற்படும் இழப்புக்கள் வியட்நாமுடன் ஒப்பிடப்படும் அளவிற்குச் சென்றுகொண்டிருக்கின்றது. அமெரிக்கப் படைகள் சந்தித்துவரும் இழப்பின் காரணமாக அமெரிக்காவில் புஷ்ஷிற்கு எதிராக கடந்த மாதம் நடாத்தப்பட்ட பேரணியில் பத்து இலட்சம் மக்கள் கலந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும் எனக்கோரி சவப் பெட்டிகளுடன் இந்த ஊர்வலத்தை நடத்தியிருக்கின்றனர். ஆனால், அமெரிக்கச் சனாதிபதி புஷ், ஈராக்கிற்கு எதிரான நடவடிக்கையையோ, பயங்கரவாதத்திற்கு எதிரான போரையோ நிறுத்தப் போவதில்லையென சூளுரைத்திருக்கின்றார்.

2001 செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்கா மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலானது அமெரிக்க மக்கள் மத்தியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாகவே கூறப்படுகின்றது. இம்மாற்றம் எதிர்வரும் நவம்பர் மாதம் 02ஆம் திகதி இடம்பெறும் சனாதிபதித் தேர்தலில் எதிரொலிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில், இத்தேர்தலில் 'பயங்கரவாதத்திற்கு எதிரான தனது நடவடிக்கை சரியாது' என்ற வாதத்தை ஜோர்ஜ் டபிள்யு புஷ் முன்வைக்கையில், அவரது பிரதான போட்டியாளரான ஹெரி இந்த நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சிப்பவராக இருக்கின்றார்.

எவ்வாறாயினும், செப்ரெம்பர் 11 தாக்குதலானது மிகக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. இதன்போது அமெரிக்க மக்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியானது வெகுஇலகுவில் மாறிவிடாத ஒன்றாகவே இருக்கும்.



ஆனால், இதன் எதிரொலியாக அமெரிக்க ஆட்சியாளர்கள் எடுக்கும் நட வடிக்கைகள் குறித்த உலகின் அபிப்பிராயமும் என்றும் விமர்சனத்திற்கு உரியதாகவே இருக்கும்.

**வேலவன்**

## படையினரால் கைதாகிக் காணாமற் போனோர் சட்டநடவடிக்கைகளுக்கு உதவ இன்று அலுவலகம் திறப்பு

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோரின் பெற்றோர், குடும்ப அங்கத்தவர்களுக்கான அமைப்பினது யாழ்.மாவட்டத்திற்கான "மனித உரிமைகளுக்கான சுயாதீன முறைப்பாட்டு ஆணைக்குழுவின்" அலுவலகம் இன்று திருநெல்வேலியிலுள்ள இராமநாதன் வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் படையினரால் கைதாகி காணாமற் போனோரின் நிலை குறித்து அறிவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் சட்ட நடவடிக்கைகளை-சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைவாக மேற்கொள்வதற்கான சட்ட உதவிகளை வழங்கு வதற்காகவே இவ்அலுவலகம் திறக்கப்படுவதாக அவ்வமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## புங்குடுதீவில் படையினர் நிலைகளை பலப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்திலுள்ள புங்குடுதீவுப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினர் வழமைக்குமாறாக தமது நிலைகளின் பாதுகாப்பினை துரிதமாகப் பலப்படுத்தி வருவதாகத் தெரியவருகிறது.

அந்தவகையில் புங்குடுதீவிலுள்ள கடலோர காவலரண்கள், மினிமுகாம்கள், முன்னணிகாவலரண்கள், முட்கம்பிவேலிகள் என்பன துரிதமாகப் பலப்படுத்தப்பட்டு வருவதுடன், புங்குடுதீவுப் பிரதேசத்தின் கடலிலும், தரையிலும் படையினர் தமது ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். இதனால் அப்பகுதி மக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. (33)

## கதிரியக்க இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பளையில் உள்ள புற்று நோய் வைத்தியசாலைக்கு உலக வங்கியின் நிதியுதவித்திட்டத்தின் கீழ் புற்று நோய்ச் சிகிச்சைக்கான கதிரியக்க இயந்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு இராணுவ அதி உயர்பாதுகாப்பு வலயத்துள் காணப்படும் மேற்படி வைத்தியசாலையின் புற்று நோய்ச் சிகிச்சைப்பிரிவை மீள இயக்குவதற்கு ஏற்கனவே படையினர் அனுமதி வழங்கியுள்ளபோதும் உரிய சிகிச்சை உபகரண மற்றும் தளபாட வசதிகள் இன்மையால் அதனை இயக்குவதில் பல பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இதனைக் கவனத்தில் கொண்டே உலக வங்கியின் நிதியுதவித்திட்டத்தின் கீழ் கதிரியக்க இயந்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (33)

## கட்டுமரங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களது தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக 'மூவி மென்டா' எனும் சர்வதேச தொண்டர் அமைப்பினால் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் இவ்வமைப்பு பருத்தித்துறை, இம்புருட்டிமுனை, கற்கோவளம் உள்ளிட்ட வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு வழங்குவதற்கென 240 கடற்றொழில் வலைகளையும், 70 கட்டுமரங்களையும் வடமராட்சி கடற்றொழிலாளர் சங்க சமாசத்திடம் வழங்கியிருக்கிறது.(33)

## பாடசாலை அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி படையினர் ஆக்கிரமிப்பால் திரும்பல்

(வடமராட்சி)

வலிகாமம் வடக்கின் அதி உயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் அமைந்துள்ள பாடசாலைகளது அபிவிருத்திக்கென ஒதுக்கப்படுகின்ற நிதியை உரியவகையில் செலவிடமுடியாததோர் சூழல் எழுந்துள்ளது.

குறிப்பாக இரண்டாம் நிலை கல்வி அமைச்சினால் பாடசாலைகளில் கட்புல, செவிப்புல சாதன அறைகளை நிர்மாணிக்கவென யாழ். குடாநாட்டிலுள்ள 26 பாடசாலைகளுக்கென நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.ஆயினும் அவற்றினுள் உயர்பாதுகாப்பு வலயப்பகுதியினுள் அமைந்துள்ள காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி மற்றும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் என்பவற்றின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

எனினும் உயர்பாதுகாப்பு வலயப்பகுதியினுள் இப் பாடசாலைகள் அமைந்திருப்பதைக் காரணம் காட்டி ஒதுக்கப்பட்ட நிதி உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியேயுள்ள பண்ணாகம், மெய்கண்டான் வித்தியாலயம் மற்றும் சுதுமலை பாரதி வித்தியாலயம் என்பவற்றிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று நாடாளவிய ரீதியில் மத்தியமகாவித்தியாலயம் 54 இலும் மெற்கொள்ள வேண்டிய அவசர திட்டங்களுக்கென தலா ஐந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளமையினைக் காரணங்காட்டி வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி வேறு பாடசாலைகளுக்கு தற்போது திருப்பப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் உயர்பாதுகாப்பு வலயத்தினுள்அமைந்துள்ள இப் பாடசாலைகளை மீள இயக்கப் படைத்தரப்புகளும் முயற்சிகளை மேற்கொண்டுள்ள நிலையில் நிதி ஒதுக்கீடுகள் திருப்பி விடப்படுகின்றமை அதனைக் கேள்விக் குறியாக்கி விடுமென கல்விச் சமூகம் அச்சம் வெளியிட்டுள்ளது. (27)

# தமிழீழ மீட்பு நிதி கடன் மீளல் -2004

## பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு

86. யா/பரு/ 3135 திரு. சல்வதோர் ஆபேல்
87. யா/பரு/ 3167 திரு. ஏரம்பமூர்த்தி சதாசிவம்
88. யா/பரு/ 3178 திரு. கிட்டினபிள்ளை விசுவலிங்கம்
89. யா/பரு/ 3239 திருமதி. நாகரத்தினம் குமாரசாமி
90. யா/பரு/ 3288 திரு. சின்னக்குட்டி காராளசிங்கம்
91. யா/பரு/ 3316 திரு. சின்னையா வடிவேலு
92. யா/பரு/ 3317 திரு. சிதம்பரியார் வல்லிபுரம் இராசமாணிக்கம்
93. யா/பரு/ 3347 திருமதி. இராசம்மா தியாகராசா
94. யா/பரு/ 3410 திருமதி. பாறுபதி தாமு
95. யா/பரு/ 3460 திரு. கணபதிப்பிள்ளை கதிர்காமு
96. யா/பரு/ 3461 திரு. வேலுப்பிள்ளை அம்பலவி
97. யா/பரு/ 3485 திருமதி. தனலட்சுமி வேலுப்பிள்ளை
98. யா/பரு/ 3497 திரு. கணபதிப்பிள்ளை ஏரம்பமூர்த்தி
99. யா/பரு/ 3498 திரு. ஆறுமுகம் மயில்வாகனம்
100. யா/பரு/ 3575 திரு. சிதம்பரநாதன் சாம்பசிவம்
101. யா/பரு/ 3588 திருமதி. இரத்தினம் கந்தசாமி
102. யா/பரு/ 3619 திரு. தம்பையா நடராசா
103. யா/பரு/ 3636 திரு. சின்னத்தம்பி கந்தையா
104. யா/பரு/ 3637 திரு. கதிர்காமு பொன்னுத்துரை
105. யா/பரு/ 3696 திருமதி. சின்னம்மா நாகராசா
106. யா/பரு/ 3783 திரு. அருணாசலம் செல்வகதிரமலை
107. யா/பரு/ 3788 திரு. கதிரிப்பிள்ளை இரத்தினம்
108. யா/பரு/ 3852 திரு. கிருஷ்ணபிள்ளை அமிர்தலிங்கம்
109. யா/பரு/ 3864 திரு. சின்னத்துரை குலசேகரம்
110. யா/பரு/ 3867 திருமதி. இலட்சுமிப்பிள்ளை ஆறுமுகம்
111. யா/பரு/ 3901 திரு. மாப்பாணர் கந்தசாமி
112. யா/பரு/ 3936 திரு. அம்பலவி அரியரட்ணம்
113. யா/பரு/ 3968 திரு. வேலுப்பிள்ளை ஆறுமுகம்
114. யா/பரு/ 4048 திரு. சின்னையா சிவராசா
115. யா/பரு/ 4152 திரு. சுப்பிரமணியம் இராமகிருஷ்ணர்
116. யா/பரு/ 4158 திரு. வல்லிபுரம் தம்பிப்பிள்ளை
117. யா/பரு/ 4214 திருமதி. பரமேஸ்வரி கதிர்காமநாதன்
118. யா/பரு/ 4269 திருமதி. நவமணி குழந்தைவேற்பிள்ளை
119. யா/பரு/ 4308 திரு. இராமலிங்கம் கனகசேகரம்
120. யா/பரு/ 4331 திரு. கணபதிப்பிள்ளை கந்தசாமி
121. யா/பரு/ 4368 திரு. சுப்பிரமணியம் மாணிக்கம்
122. யா/பரு/ 4370 திரு. தாமோதரம்பிள்ளை செகராசசிங்கம்
123. யா/பரு/ 4372 திரு. ஆழ்வாப்பிள்ளை சிவப்பிரகாசம்
124. யா/பரு/ 4400 திரு. மாணிக்கம் முருகுப்பிள்ளை
125. யா/பரு/ 4505 திரு. கதிரிப்பிள்ளை துரைராசா
126. யா/பரு/ 4530 திரு. விசாகப்பெருமாள் ஜயாமுத்து
127. யா/பரு/ 4545 திருமதி. மகேந்திராணி இராசதுரை
128. யா/பரு/ 4589 திரு. சரவணமுத்து சக்திவேல்
129. யா/பரு/ 4676 திரு. இராமசாமி மகாதேவா
130. யா/பரு/ 4766 திரு. தனிஸ்லாஸ் அந்தோனி எனிஸ்டன்
131. யா/பரு/ 4818 திரு. பஞ்சவர்ணம் முருகதாஸ்
132. யா/பரு/ 4996 திரு. இராசரத்தினம் சிறீஸ்கந்தராசா
133. யா/பரு/ 5003 திரு. கந்தவனம் கணபதிப்பிள்ளை
134. யா/பரு/ 5039 திருமதி. சந்தானலட்சுமி பஞ்சாட்சரம்
135. யா/பரு/ 5046 திரு. கந்தன் அந்தோனிப்பிள்ளை
136. யா/பரு/ 5047 செல்வி. அமிர்தகுலபாஞ்சாலி அருட்செல்வநாயகம்
137. யா/பரு/ 5062 திரு. சிதம்பரப்பிள்ளை வைரமுத்து
138. யா/பரு/ 5085 திரு. முருகுப்பிள்ளை விசுவலிங்கம்
139. யா/பரு/ 5120 திருமதி. அம்பிகைநாச்சி சுப்பிரமணியம்
140. யா/பரு/ 5121 திருமதி. பாறுபதிப்பிள்ளை செல்லையா
141. யா/பரு/ 5125 திரு. சின்னராசா சுப்பிரமணியம்
142. யா/பரு/ 5151 திரு. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
143. யா/பரு/ 5177 திருமதி. கமலரத்தினம் கார்த்திகேசு
144. யா/பரு/ 5226 திரு. சுப்பர் கணபதிப்பிள்ளை
145. யா/பரு/ 5233 திரு. ஆண்டி பொன்னன்
146. யா/பரு/ 5247 திருமதி. பாலமணி சீவரெத்தினம்
147. யா/பரு/ 5306 திரு. ஜேம்ஸ் வைரவப்பிள்ளை
148. யா/பரு/ 5310 திருமதி. பூரத்தினம் சாந்தரத்தினம்
149. யா/பரு/ 5337 திருமதி. செல்வரத்தினம் அருமைராசா
150. யா/பரு/ 5398 செல்வி. ஞானேஸ்வரி சின்னத்துரை
151. யா/பரு/ 5474 திருமதி. தில்லையம்மா கந்தசாமி
152. யா/பரு/ 5542 திரு. ஞானப்பிரகாசம் சாள்ஸ்
153. யா/பரு/ 5546 திரு. நாகலிங்கம் சோமசுந்தரம்
154. யா/பரு/ 5560 திருமதி. மகேஸ்வரி விநாயகமூர்த்தி
155. யா/பரு/ 5603 திரு. முருகேசம்பிள்ளை மகாலிங்கம்
156. யா/பரு/ 5613 திரு. செல்லையா இராசதுரை
157. யா/பரு/ 5614 திரு. கணபதி நமசிவாயம்
158. யா/பரு/ 5617 திரு. வல்லிபுரம் சுப்பிரமணியம்
159. யா/பரு/ 5664 திருமதி. முத்தம்மா பிரான்சிஸ்கோ பிலிப்
160. யா/பரு/ 5719 திரு. மயில்வாகனம் விஜயரட்ணம்
161. யா/பரு/ 5724 திரு. குமாரசாமி கதிர்காமத்தம்பி
162. யா/பரு/ 5749 திரு. பொன்னம்பலம் தியாகராசா
163. யா/பரு/ 5750 திருமதி. மீனாட்சிப்பிள்ளை தருமலிங்கம்
164. யா/பரு/ 5827 திரு. மாரிமுத்து இராசரெத்தினம்
165. யா/பரு/ 5853 திருமதி. கலாராணி வரதராசா
166. யா/பரு/ 5873 திருமதி. தெய்வானைக்கண்டு கனகசபை
167. யா/பரு/ 5875 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
168. யா/பரு/ 5891 திரு. கதிரிப்பிள்ளை பொன்னையா
169. யா/பரு/ 6082 திரு. வாரித்தம்பி தங்கராசா
170. யா/பரு/ 6086 திரு. பாலசுப்பிரமணியம் சதாசிவம்
171. யா/பரு/ 6093 திருமதி. இரத்தினம் குகதாஸ்
172. யா/பரு/ 6102 திருமதி. கலைச்செல்வி செல்வானந்தம்
173. யா/பரு/ 6137 திரு. அருணாசலம் இரத்தினசபாபதி
174. யா/பரு/ 6151 திரு. வேலும்மயிலும் சிவகுருநாதன்
175. யா/பரு/ 6167 திருமதி. பொன்னம்மா பொன்னுத்துரை
176. யா/பரு/ 6186 திரு. கெங்காதரன் இளையதம்பி
177. யா/பரு/ 6195 திருமதி. நல்லம்மா நமசிவாயம்
178. யா/பரு/ 6218 திரு. மாதர் வேலும்மயிலும்
179. யா/பரு/ 6257 திருமதி. தையல்முத்து இராமசாமி
180. யா/பரு/ 6269 திரு. மயில்வாகனம் வைத்தியலிங்கம்
181. யா/பரு/ 6318 திருமதி. நீலாதேவி நாராயணசாமி
182. யா/பரு/ 6354 திரு. நடராசா மோகனதாஸ்
183. யா/பரு/ 6361 திருமதி. ஜெயராணி செல்வலிங்கம்
184. யா/பரு/ 6375 திரு. செல்லத்துரை புவனேஸ்வரராசா
185. யா/பரு/ 6467 திரு. வீரகத்தி கிருஷ்ணபிள்ளை
186. யா/பரு/ 6534 செல்வி. மகிழினி சரவணபவானந்தன்
187. யா/பரு/ 6539 திருமதி. சுபாசினி கிருஷ்ணகுரு
188. யா/பரு/ 6540 திரு. கணபதிப்பிள்ளை சதாசிவம்
189. யா/பரு/ 6557 திரு. இரத்தினசிங்கம் இராமமூர்த்தி
190. யா/பரு/ 6695 திருமதி. பாக்கியலட்சுமி கிருஷ்ணபிள்ளை
191. யா/பரு/ 6747 திரு. பொன்னுத்துரை இரத்தினசிங்கம்
192. யா/பரு/ 6812 திரு. வேலப்பர் முருகேசு
193. யா/பரு/ 6816 திரு. சின்னையா தியாகராசா
194. யா/பரு/ 6863 திருமதி. சிவகாமிப்பிள்ளை கந்தையா
195. யா/பரு/ 6872 திருமதி. சின்னம்மா சுப்பிரமணியம்

## வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு

1. யா/வ.கி/ 70 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
2. யா/வ.கி/ 122 திரு. கந்தையா சிவஞானம்
3. யா/வ.கி/ 175 திரு. வேலுப்பிள்ளை ஐயம்பிள்ளை
4. யா/வ.கி/ 193 திரு. இராசையா ஜீவரட்ணம்
5. யா/வ.கி/ 205 திரு. சபாபதிப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை
6. யா/வ.கி/ 222 திரு. மரியாம்பிள்ளை றூபேட்மரியதாஸ்
7. யா/வ.கி/ 292 திரு. செபமாலை இராயப்பு
8. யா/வ.கி/ 510 திரு. முருகேசு கணபதிப்பிள்ளை
9. யா/வ.கி/ 544 திரு. நடராசா ஜெயராசா
10. யா/வ.கி/ 556 திரு. கபிரிகேல் ஆசீர்பாதம்
11. யா/வ.கி/ 557 திரு. தேவசகாயம் திரேஸ்புஸ்பம்
12. யா/வ.கி/ 570 திரு. சந்தியாப்பிள்ளை கஸ்மீர்
13. யா/வ.கி/ 658 திரு. சின்னத்தம்பி குலசிங்கம்
14. யா/வ.கி/ 722 திருமதி. மேரிமெக்டனிக் ஆனந்தராஜா
15. யா/வ.கி/ 823 திரு. முருகேசு சதாசிவம் வல்லிபுரநாதர்
16. யா/வ.கி/ 864 திரு. சின்னத்தம்பி வீரசிங்கம்
17. யா/வ.கி/ 891 திரு. மயில்வாகனம் திருநாமம்
18. யா/வ.கி/ 939 செல்வி. அன்னலட்சுமி கந்தசாமி
19. யா/வ.கி/ 971 திருமதி. றோஸ்மேரிறெயினா எட்வேட்அரியநாயகம்
20. யா/வ.கி/ 1005 திரு. சின்னர் கணபதிப்பிள்ளை
21. யா/வ.கி/ 1009 திருமதி. ஜெயராணி சௌந்தரராசா
22. யா/வ.கி/ 1022 திரு. சபாபதிப்பிள்ளை முத்தையா
23. யா/வ.கி/ 1075 திரு. சிற்றம்பலம் பரமசிவம்
24. யா/வ.கி/ 1084 திரு. மயில்வாகனம் பசுபதி
25. யா/வ.கி/ 1089 திரு. பாக்கியநாதன் புவனேந்திரன்
26. யா/வ.கி/ 1104 திரு. கணபதிப்பிள்ளை வடிவேலு
27. யா/வ.கி/ 1159 திரு. சின்னையா கதிர்காமு
28. யா/வ.கி/ 1217 திருமதி. அந்தோனியாமரியரீட்டா ஜெயசீலன்
29. யா/வ.கி/ 1243 திரு. முருகேசு வினாசித்தம்பி
30. யா/வ.கி/ 1421 திரு. தம்பையா நாகமுத்து

## சாவகச்சேரி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு

1. யா/சா/ 86 திரு. சுந்தரம் நடராசா
2. யா/சா/ 146 திரு. சரவணமுத்து சங்கரப்பிள்ளை
3. யா/சா/ 159 செல்வி. கலாநிதி சுப்பிரமணியம்
4. யா/சா/ 171 திரு. சரவணமுத்து இராசஇரத்தினம்
5. யா/சா/ 178 திரு. செல்லப்பா சுப்பிரமணியம்
6. யா/சா/ 235 திரு. காசிநாதர் சின்னத்தம்பி
7. யா/சா/ 347 திரு. சோமசுந்தரம் விக்னேஸ்வரன்
8. யா/சா/ 444 திரு. சங்கரப்பிள்ளை இராசரத்தினம்
9. யா/சா/ 515 திரு. செல்லப்பா தங்கராசா
10. யா/சா/ 557 திரு. கந்தையா டானியல் சச்சிதானந்தம்
11. யா/சா/ 567 திரு. கந்தையா டானியல் சச்சிதானந்தம்
12. யா/சா/ 583 திருமதி. நாகமுத்து சடாசிவம்
13. யா/சா/ 682 திரு. முத்தையா பொன்னுத்துரை
14. யா/சா/ 762 திரு. அருளம்பலம் சிவசிங்கம்
15. யா/சா/ 764 திருமதி. பூரணம் வயித்தி
16. யா/சா/ 780 திருமதி. நல்லம்மா கந்தசாமி
17. யா/சா/ 782 திரு. தம்பிராசா கதிர்காமநாதன்
18. யா/சா/ 808 திருமதி. நல்லம்மா முருகேசு
19. யா/சா/ 809 திரு. சின்னத்தம்பி தளையசிங்கம்
20. யா/சா/ 811 திருமதி. பொன்னம்மா சுப்பையா
21. யா/சா/ 939 திருமதி. கலாவல்லி உருத்திரன்
22. யா/சா/ 1126 திரு. நாகமுத்து சின்னத்துரை
23. யா/சா/ 1130 திரு. நாகமுத்து செல்லத்துரை
24. யா/சா/ 1145 திரு. வைத்திலிங்கம் சரவணமுத்து
25. யா/சா/ 1152 திரு. சின்னட்டி கந்தன்
26. யா/சா/ 1161 திரு. நல்லதம்பி கந்தையா
27. யா/சா/ 1180 திருமதி. புஸ்பவதி இராசதுரை
28. யா/சா/ 1204 திருமதி. சிவனேஸ்வரி விசாகரத்தினம்
29. யா/சா/ 1217 திரு. சரவணமுத்து செல்லப்பா
30. யா/சா/ 1225 திரு. கந்தையா கனகசபாபதி
31. யா/சா/ 1244 திரு. சங்கரப்பிள்ளை யோகநாதன்
32. யா/சா/ 1287 திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
33. யா/சா/ 1317 திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
34. யா/சா/ 1386 திரு. சரவணமுத்து கைலாயநாதன்
35. யா/சா/ 1393 திரு. தில்லையம்பலம் சரவணமுத்து
36. யா/சா/ 1482 திரு. தம்பு சின்னையா
37. யா/சா/ 1489 திரு. துரையப்பா சோதிலிங்கம்
38. யா/சா/ 1516 திரு. வல்லிபுரம் சிவப்பிரகாசம்
39. யா/சா/ 1519 திரு. வீரகத்தி மாணிக்கவாசகர்
40. யா/சா/ 1574 திரு. சந்திரசேகரம் நடேசபிள்ளை
41. யா/சா/ 1582 திரு. ஞானசெல்வம் கிறிஸ்ரி பிரேமகுமார்
42. யா/சா/ 1678 திருமதி. தங்கம்மா ஆறுமுகம்
43. யா/சா/ 1684 திருமதி. தங்கரத்தினம் சதாசிவம்
44. யா/சா/ 1686 செல்வி. நளாயினி குமாரசாமி
45. யா/சா/ 1705 செல்வி. பிறேமாதேவி முருகேசு
46. யா/சா/ 1706 திரு. பத்மநாதன் கிரிதரன்
47. யா/சா/ 1708 திரு. சுப்பையா இளையதம்பி
48. யா/சா/ 1767 திரு. அம்பலவாணர் சுப்பிரமணியம்
49. யா/சா/ 1800 திரு. கதிரேசு கந்தசாமி
50. யா/சா/ 1841 திரு. சின்னத்தம்பி பண்டாரம்
51. யா/சா/ 2057 திரு. சுப்பையா துரைசிங்கம்
52. யா/சா/ 2090 திரு. சபாபதிப்பிள்ளை குமரையா
53. யா/சா/ 2094 திரு. இராசையா ரவீந்திரன்
54. யா/சா/ 2106 திரு. இளையப்பா சபாநாதன்
55. யா/சா/ 2142 திரு. சுப்பையா முருகேசு
56. யா/சா/ 2171 திரு. நல்லதம்பி தர்மராசா
57. யா/சா/ 2227 திரு. இராசையா முருகையா
58. யா/சா/ 2237 திரு. வல்லிபுரம் நடராசா
59. யா/சா/ 2448 திரு. வேலுப்பிள்ளை வதனதீசன்
60. யா/சா/ 2461 செல்வி. ராஜினி சண்முகநாதன்
61. யா/சா/ 2551 திருமதி. சியாமளா கந்தசாமி
62. யா/சா/ 2555 திரு. காசித்தம்பி கதிரேசு
63. யா/சா/ 2567 திரு. கந்தையா சரவணமுத்து
64. யா/சா/ 2683 திரு. வைத்திலிங்கம் சின்னத்தம்பி
65. யா/சா/ 2714 திரு. சின்னக்குட்டி இராசன்
66. யா/சா/ 2755 திரு. சுந்தரம் சின்னத்தம்பி
67. யா/சா/ 2779 திருமதி. வள்ளிப்பிள்ளை சின்னத்துரை
68. யா/சா/ 2798 திரு. சின்னையா கந்தசாமி
69. யா/சா/ 2820 திரு. சின்னவர் கந்தையா
70 .யா/சா/ 2836 திரு. கணபதி செல்லன்
71 .யா/சா/ 3024 திரு. வல்லிபுரம் நாகலிங்கம்
72 .யா/சா/ 3073 திரு. நல்லதம்பி சுவாமிநாதன்
73 .யா/சா/ 3093 திரு. வேலுப்பிள்ளை துரைராசா
74 .யா/சா/ 3158 திருமதி. இராசநாயகி நவரத்தினம்
75 .யா/சா/ 3185 திருமதி. இராஜேஸ்வரி சிவநாதன்
76 .யா/சா/ 3211 திரு. முதலித்தம்பி செல்லத்துரை
77 .யா/சா/ 3223 திரு. முருகேசு கணபதிப்பிள்ளை
78 .யா/சா/ 3225 திருமதி. நீலாம்பிகை பாலசிங்கம்
79 .யா/சா/ 3261 திரு. சின்னப்பு காங்கேஸ் குலசேகரம்
80. யா/சா/ 3325 திரு. தம்பு இராமலிங்கம்
81. யா/சா/ 3327 திரு. கனகர் செல்லையா
82. யா/சா/ 3329 திரு. கதிரவேலு ஐயாத்துரை
83. யா/சா/ 3394 திரு. வைத்திலிங்கம் நடராசா
84. யா/சா/ 3395 திரு. செல்லையா கதிர்காமு
85. யா/சா/ 3435 திருமதி. நல்லம்மா மயில்வாகனம்
86. யா/சா/ 3437 திரு. கந்தையா ஆறுமுகம்
87. யா/சா/ 3512 திரு. வினாசித்தம்பி தம்பிப்பிள்ளை
88. யா/சா/ 3535 திரு. கந்தையா கணபதிப்பிள்ளை
89. யா/சா/ 3552 திரு. இளையதம்பி முருகுப்பிள்ளை
90. யா/சா/ 3614 திரு. வாரித்தம்பி சிதம்பரப்பிள்ளை
91. யா/சா/ 3659 திரு. சின்னக்குட்டி தம்பு
92. யா/சா/ 3662 திரு. பெரியதம்பி மயில்வாகனம்
93. யா/சா/ 3716 திருமதி. மங்கையர்க்கரசி துரைராசா
94. யா/சா/ 3776 திரு. கணபதிப்பிள்ளை குமாரலிங்கம்
95. யா/சா/ 4124 திரு. ஆழ்வான் சின்னத்துரை
96. யா/சா/ 4149 திருமதி. தங்கேஸ்வரி இராமநாதன்
97. யா/சா/ 4247 திரு. வேலன் செல்வராசா
98. யா/சா/ 4286 திரு. கந்தர் தம்பிப்பிள்ளை ஞானப்பிரகாசம்
99. யா/சா/ 4298 திரு. ஆறுமுகம் யோகராசா
100. யா/சா/ 4313 திரு. சின்னையா கார்த்திகேசு
101. யா/சா/ 4377 திரு. சின்னையா செல்லத்துரை
102. யா/சா/ 4456 செல்வி. சிவகௌரி செல்லையா
103. யா/சா/ 4514 திரு. சரவணமுத்து சுப்பிரமணியம்
104. யா/சா/ 4632 திருமதி. சின்னப்பிள்ளை வயிரன்
105. யா/சா/ 4648 திரு. வீரசிங்கம் விக்கினேஸ்வரன்
106. யா/சா/ 4783 திரு. அம்பலவாணர் நமசிவாயம்
107. யா/சா/ 4785 திரு. தம்பையா பாலேந்திரன்
108 .யா/சா/ 4812 திரு. பத்தலோமை யோசேப்
109 .யா/சா/ 4832 திரு. பேதுறுப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை
110 .யா/சா/ 5078 திரு. சின்னத்தம்பி இரத்தினசிங்கம்
111 .யா/சா/ 5188 திரு. விஸ்வநாதக்குருக்கள் வேதமணவாளன்
112 .யா/சா/ 5217 திரு. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை
113 .யா/சா/ 5219 திருமதி. பூரணம் கனகசபை
114 .யா/சா/ 5229 திரு. தம்பு ஆறுமுகம்
115 .யா/சா/ 5269 திரு. தாமு கணபதிப்பிள்ளை
116 .யா/சா/ 5381 திரு. காத்திப்பிள்ளை கனகசபை
117 .யா/சா/ 5396 திரு. சண்முகம் சரவணமுத்து
118 .யா/சா/ 5410 திரு. சண்முகம் சரவணமுத்து
119 .யா/சா/ 5433 திரு. சின்னத்தம்பி இராமலிங்கம்
120 .யா/சா/ 5477 திரு. தியாகராசா சூரியகுமார்
121 .யா/சா/ 5480 திரு. உடையாபிள்ளை திருநாவுக்கரசு
122 .யா/சா/ 5518 செல்வி. சத்தியவதனி கந்தையா
123 .யா/சா/ 5575 திரு. சின்னத்தம்பி முருகேசு
124 .யா/சா/ 5589 திரு. சின்னத்தம்பி இராசேந்திரம்
125 .யா/சா/ 5595 திரு. வீரகத்தி நடராசா
126 .யா/சா/ 5597 திரு. வேலுப்பிள்ளை கனகலிங்கம்
127 .யா/சா/ 5599 திரு. மருதன் கதிரவேலன்
128 .யா/சா/ 5785 திருமதி. சின்னாச்சிப்பிள்ளை கிருட்டினர்
129 .யா/சா/ 5944 திரு. கணபதி வேலுப்பிள்ளை
130 .யா/சா/ 5964 திரு. டானியல் ஜேம்ஸ் பொன்னுத்துரை
131 .யா/சா/ 6007 திரு. ஸ்ரீவின் நல்லையா நவரட்ணம்
132. யா/சா/ 6058 திரு. கதிரன் சிலம்பு
133 .யா/சா/ 6153 திரு. சின்னப்பு தாமோதரம்பிள்ளை
134 .யா/சா/ 6170 திரு. கணபதிப்பிள்ளை உமாமகேஸ்வரன்
135 .யா/சா/ 6185 திரு. கணபதிப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை
136 .யா/சா/ 6247 திரு. குமாரசாமி கிருஸ்ணசாமி
137 .யா/சா/ 6289 திரு. சின்னத்தம்பி படைவீரசிங்கம்
138 .யா/சா/ 6375 திருமதி. சுந்தராம்பாள் சோமசுந்தரம்
139 .யா/சா/ 6490 திரு. தருமலிங்கம் பாலசுப்பிரமணியம்
140 .யா/சா/ 6502 திரு. இளையவன் கந்தையா
141 .யா/சா/ 6610 திருமதி. சின்னக்குட்டி கந்தன்
142 .யா/சா/ 6652 திரு. சுப்பன் கணபதி
143 .யா/சா/ 6698 திருமதி. சின்னம்மா நமசிவாயம்
144 .யா/சா/ 6717 திரு. த்ளையசிங்கம் அகத்தியர்
145 .யா/சா/ 6726 திரு. ஜோசப்ராசநாயகம் ஞானப்பிரகாசம்
146 .யா/சா/ 6746 திரு. வெற்றிவேலு சிவப்பிரகாசம்
147 .யா/சா/ 6785 திரு. அப்பாக்குட்டி தாமோதரம்பிள்ளை
148 .யா/சா/ 6822 திரு. கந்தையா தில்லையம்பலம்
149 .யா/சா/ 6880 திரு. மாதன் தம்பையா
150 .யா/சா/ 6887 திரு. பாலசிங்கம் பாலதாஸ்
151 .யா/சா/ 6938 திருமதி. பரிமள்ம் கணபதிப்பிள்ளை

# தமிழீழ மீட்பு நிதி கடன் மீளல் - 2004

**சாவகச்சேரி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு**

152. யா/சா/ 6945 திரு. முருகேசு சரவணமுத்து
153. யா/சா/ 6985 திரு. கந்தையா ஆறுமுகம்
154. யா/சா/ 6999 திரு. செல்லத்துரை ஆனந்தராசா
155. யா/சா/ 7054 திருமதி. பொன்னம்மா தம்பிராசா
156. யா/சா/ 7148 திரு. பொன்னன் சிங்கராசா
157. யா/சா/ 7155 திருமதி. சீதா கருணாகரன்
158. யா/சா/ 7198 திரு. வேலுப்பிள்ளை இரத்தினம்
159. யா/சா/ 7263 திருமதி. தங்கம்மா ஐயாத்துரை
160. யா/சா/ 7273 திரு. கதிராமு கந்தையா
161. யா/சா/ 7301 திருமதி. அன்னம்மா பாலசுப்பிரமணியம்
162. யா/சா/ 7346 திரு. காசிநாதர் சுப்பிரமணியம்
163. யா/சா/ 7369 திரு. வயிரவன் செல்லன்
164. யா/சா/ 7397 திருமதி. புவனேஸ்வரி சின்னத்தம்பி
165. யா/சா/ 7465 திரு. நடுவிலான் வைரவன்
166. யா/சா/ 7467 திரு. முத்தர் தம்பையா
167. யா/சா/ 7578 திரு. சின்னத்தம்பி சிவராசா
168. யா/சா/ 7601 திரு. சின்னையா கந்தையா
169. யா/சா/ 7605 திரு. அப்பாச்சாமிகுருக்கள் விசுவநாதஐயர்
170. யா/சா/ 7620 திரு. வைத்திலிங்கம் நடராசா
171. யா/சா/ 7643 திரு. கைலாயப்பிள்ளை சிவலிங்கராசா
172. யா/சா/ 7647 செல்வி. யசோதா அப்பாத்துரை
173. யா/சா/ 7652 திரு. கந்தர் காசிநாதர்
174 .யா/சா/ 7676 திரு. சின்னத்தம்பி தம்பையா
175. யா/சா/ 7695 திருமதி. பூரணம் சின்னத்துரை
176. யா/சா/ 7717 திரு. பழனி மகாதேவன்
177. யா/சா/ 7738 திரு. வீரசிங்கம் இளையதம்பி
178. யா/சா/ 7765 திரு. சீனிக்குட்டி செல்லப்பா
179. யா/சா/ 7797 திருமதி. பொன்னம்மா ஐயாத்துரை
180. யா/சா/ 7803 திரு. சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
181. யா/சா/ 7882 திரு. தம்பு சிதம்பரப்பிள்ளை
182. யா/சா/ 7883 திரு. மூத்ததம்பி சண்முகம்
183. யா/சா/ 7886 திரு. சின்னப்பு சுப்பிரமணியம்
184. யா/சா/ 7907 செல்வி. பரமேஸ்வரி சுந்தரம்
185. யா/சா/ 7942 திரு. சுவாமிநாதர் சிவப்பிரகாசம்
186. யா/சா/ 7953 திரு. வல்லிபுரம் நாகமுத்து
187. யா/சா/ 7955 திரு. சரவணமுத்து மகாலிங்கசிவம்
188. யா/சா/ 7964 திரு. இரத்தினம் ஜெகநேசன்
189. யா/சா/ 7970 திரு. முருகேசு சண்முகநாதன்
190. யா/சா/ 7979 திரு. நமசிவாயம் வைரமுத்து
191. யா/சா/ 8016 திருமதி. தங்கமுத்து சிவசம்பு
192. யா/சா/ 8056 திருமதி. சிவகாமி கந்தையா
193. யா/சா/ 8097 செல்வி. கமலாட்சி சரவணமுத்து
194. யா/சா/ 8099 திருமதி. அன்னபூரணம் தியாகராசா
195. யா/சா/ 8121 திரு. சின்னப்பா சுப்பு
196. யா/சா/ 8255 திருமதி. சங்கரப்பிள்ளை நல்லதம்பி
197. யா/சா/ 8261 திருமதி. லில்லி பாக்கியநாதன்
198. யா/சா/ 8300 திரு. சின்னத்தம்பி தியாகராசா
199. யா/சா/ 8307 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
200. யா/சா/ 8325 திரு. கந்தையா ஆசைப்பிள்ளை
201. யா/சா/ 8326 திரு. விநாயகமூர்த்தி சுப்பிரமணியம்
202. யா/சா/ 8328 திரு. பண்டாரி ஆழ்வான்
203. யா/சா/ 8330 திருமதி. பாக்கியம் வைரவன்
204. யா/சா/ 8348 திரு. இன்னாசிமுத்து ஜெயசூரியா
205. யா/சா/ 8368 திரு. கதிரித்தம்பி திருஞானம்
206. யா/சா/ 8380 திரு. இராயப்பு அன்ரன்ஜெயரட்ணம்
207. யா/சா/ 8391 திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
208. யா/சா/ 8444 திரு. அப்பையா காசிநாதர்
209. யா/சா/ 8474 திரு. குமாரவேலு அப்புத்துரை
210. யா/சா/ 8476 திரு. வெள்ளையன் இளையவன்
211. யா/சா/ 8481 திரு. காசி சின்னையா
212. யா/சா/ 8491 திரு. வேலாயுதர் வித்தியானந்தன்
213. யா/சா/ 8494 திரு. பொன்னையா குலராசசிங்கம்
214. யா/சா/ 8501 திரு. முத்து விநாசித்தம்பி
215. யா/சா/ 8503 திரு. தோமஸ் போஜ்கனற்
216. யா/சா/ 8534 திரு. வைத்திலிங்கம் புவிதாசன்
217. யா/சா/ 8545 திரு. கந்தையா நமசிவாயம்
218. யா/சா/ 8649 திரு. சோமசுந்தரம் ஜெயரத்தினம்
219. யா/சா/ 8668 திரு. தம்பிஐயா வெற்றிவேலு
220. யா/சா/ 8670 செல்வி. நாகம்மா சிதம்பரன்
221. யா/சா/ 8681 திரு. முருகர் வேலுப்பிள்ளை
222. யா/சா/ 8699 திரு. செல்லன் கார்த்திகேசு
223. யா/சா/ 8722 திரு. கந்தையா ஐயாத்துரை
224. யா/சா/ 8862 திருமதி. தனபாக்கியம் யோகநாதன்
225. யா/சா/ 8907 திருமதி. பொன்னி பொன்னன்
226. யா/சா/ 8999 திருமதி. தங்கம்மா இராசரத்தினம்
227. யா/சா/ 9038 திரு. சின்னத்துரை அழகராசா
228.யா/சா/ 9109 திருமதி. சாரதாதேவி தனபாலசிங்கம்
229. யா/சா/ 9161 திருமதி. நாகரத்தினம் கதிரித்தம்பி
230. யா/சா/ 9250 திரு. கந்தர் முருகேசு
231. யா/சா/ 9320 திரு. பொன்னையா யோகநாதன்
232. யா/சா/ 9391 திரு. சண்முகநாதன் பாலகிருஷ்ணன்
233. யா/சா/ 9407 திருமதி. தங்கம் குஞ்சன்
234. யா/சா/ 9504 திருமதி. மாணிக்கம் சுப்பிரமணியம்
235. யா/சா/ 9512 திரு. ஆறுமுகம் பேரம்பலம்
236. யா/சா/ 9513 திரு. மயில்வாகனம் மகேந்திரன்
237. யா/சா/ 9641 திரு. கந்தையா மகாலிங்கம்
238. யா/சா/ 9643 திருமதி. தெய்வானைப்பிள்ளை இரத்தினம்
239. யா/சா/ 9719 செல்வி. மேரிமெக்டலீன் அருளப்பு
240. யா/சா/ 9752 திரு. பொன்னையா மார்க்கண்டு
241. யா/சா/ 9779 திரு. நாகமுத்து சிவஞானம்
242. யா/சா/ 9803 திருமதி. மகேஸ்வரி கதிரவேலு
243. யா/சா/ 9825 திரு. தாமு இளையதம்பி
244. யா/சா/ 9855 திரு. செல்லப்பா செல்லத்தம்பி
245. யா/சா/ 9895 திருமதி. புவனேஸ்வரி யோன்
246. யா/சா/ 10053 திரு. வீரகத்தி சந்திரசேகரம்
247. யா/சா/ 10067 திரு. ஆறுமுகம் சின்னத்தம்பி
248. யா/சா/ 10097 திரு. சின்னத்தம்பி பொன்னம்பலம்
249. யா/சா/ 10184 திரு. பொன்முடி கோபாலன்

**பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு**

1.கி/ப/ 35 திருமதி. தேவராணி தவராசா
2.கி/ப/ 144 திரு. கனகசபை வன்னியசிங்கம்
3.கி/ப/ 218 திரு. கந்தையா செல்வரத்தினம்
4.கி/ப/ 340 திருமதி. கமலாதேவி சுப்பிரமணியம்
5.கி/ப/ 346 திரு. அந்திரேஸ் வஸ்தியாம்பிள்ளை
6.கி/ப/ 380 திருமதி. வள்ளிப்பிள்ளை இளையதம்பி
7.கி/ப/ 400 திருமதி. பாறுவதி வயித்திலிங்கம்
8.கி/ப/ 468 திரு. நாகமுத்து சின்னத்தம்பி
9.கி/ப/ 570 திரு. கந்தையா தங்கவடிவேல்
10.கி/ப/ 707 திரு. பிலிப்பு யாக்கோப்பு
11.கி/ப/ 714 திருமதி. மாக்கிறட் பேதுறு
12.கி/ப/ 730 திரு. சின்னப்பொடியர் கணபதிப்பிள்ளை
13.கி/ப/ 741 திரு. கிட்டிணன் சந்திரகேசரம்
14.கி/ப/ 778 திரு. சிவக்கொழுந்து சிவஞானசுந்தரம்
15.கி/ப/ 854 திரு. கந்தசாமி நவரத்தினசாமி
16.கி/ப/ 873 திருமதி. மரியம்மா மரியாம்பிள்ளை
17.கி/ப/ 879 செல்வி. சிவனேஸ்வரி பொன்னுத்துரை
18.கி/ப/ 887 திரு. சின்னத்தம்பு தர்மராசா
19.கி/ப/ 966 திருமதி. தம்பு வள்ளிப்பிள்ளை

(முற்றும்)

# கட்சியின் கொள்கைப் பிரகடனத்தை கிராமம் கிராமமாகப் பரப்புரை செய்க

## - ரணில் தொண்டர்களுக்குப் பணிப்புரை

(கொழும்பு)

இரண்டு வாரங்களுக்குள் ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைப் பிரகடனத்தை நாடு முழுவதிலும் உள்ள மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், தொண்டர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பணிப்புரை வழங்கி உள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் யாவும் இதில் பங்கேற்று கிராமம் கிராமமாக வீடுகளுக்குச் சென்று பிரச்சாரங்களை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.


## 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
18 * 03 * 1976



தமிழீழ மண்ணில்
12 * 09 * 1999

**கப்டன் மனோ**

(தங்கசாமி -செல்வநாயகி)

தமிழீழ தேச விடுதலைக்கு வித்தாகியமகளே!
ரனகோச 5சிங்களப்படையை முறியடித்த வீராங்கனையே!
உன் நினைவு என்றும் மாறாது மகளே!

11.09.2004ஆம் திகதி எமது இல்லத்தில் நடைபெறும் திதிப் பிரார்த்தனையில் உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

தகவல்
தாய், தந்தை,
சகோதரர்கள்.

திருமுறிகண்டி (5043)


# கொள்ளையர் ஐவர் கைது

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்திற்கு வெளியே நங்கூரம் இட்டிருந்த இந்தியக் கப்பலில் கொள்ளை அடித்த ஐந்து கொள்ளைக்காரர்களைக் கொழும்புத் துறைமுக பாதுகாப்பு பொலிசார் கைதுசெய்துள்ளதுடன், பெறுமதிமிக்க பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.


**காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம்**

தேடல் போட்டியில் பாராட்டுப் பெறுவோர் விபரம்:-

வி. மாலதி (போராளி) லெப் கேணல் ராஜன் கல்விப்பிரிவு

V.T.தயாளன்-புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

க. பத்மகலா-உடையார் கட்டு மகாவித்தியாலயம்

புஸ்பாநந்தினி-பாரதி இல்லம், } வள்ளிபுனம்
ததுஸா-பாரதி இல்லம்,
சத்தியகலா-பாரதி இல்லம்,
தர்மிகா-பாரதி இல்லம்.

முல்லை அணியினர்,
காந்தரூபன்
அறிவுச்சோலை.

(5042)



## 01ஆம் ஆண்டு திதி நிகழ்வு

மண் மகிழ
27 • 06
1944



கண் நெகிழ
24 • 08
2003

அமரர்

# தம்பு- சிவவடிவேல்

திதி
11.09.2004

பண்பின் பிறப்பிடமே! பாசத்தின் உறைவிடமே! ஆகாயத்தின் சிற்பமே! ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறாது எம் மனது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம் எந்நாளும்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் முதலாம். ஆண்டு திதி நிகழ்வில் கலந்து, மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி:-
பெரியஅரசடி
தாமோதரம் பிள்ளை வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி

இவ்வண்ணம்.
குடும்பத்தினர்

(4913)

ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004

12 TEAMS
15 MATCHES
16 DAYS
ONE WINNER

## நதன் அஸ்ரல் சிறப்புத்துடுப்பாட்டம்

## நியூசிலாந்து அணிக்கு அபார வெற்றி




இங்கிலாந்தில் நடைபெற்று வரும் ஐ.சி.சி. மினி உலகக் கிண்ணப் போட்டியில் நேற்று இரண்டு போட்டிகள் நடைபெற்றன.

பலமான நியூசிலாந்து அறிமுக அமெரிக்க அணியையும் இங்கிலாந்து அணி அனுபவத்தில் குறைந்த வீரர்களைக் கொண்ட சிம்பாவே அணியையும் எதிர்த்து போட்டியிட்டன.




இதில் அமெரிக்க நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ஆரம்பப் போட்டியிலேயே அமெரிக்காவுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தது.

ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் நியூசிலாந்து 210 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அமெரிக்கா நியூசிலாந்தை துடுப்பெடுத் தாடுமாறு பணித்தது.

அவ் அணி 4விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 347 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் நதன் அஸ்ரல் ஆட்டமிழக்காது 145 ஓட்டங்களையும் மக்மிலன் 64, கொட்ஹரிஸ் 75 ஓட்டங்களையும் பெற்றனர்.பந்துவீச்சில் ஸ்ரப்பின் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

## இங்கிலாந்து – சிம்பாப்வே போட்டி மழையால் இடைநிறுத்தப்பட்டது




இங்கிலாந்து-சிம்பாப்வே அணிகளுக்கிடையில் நடை பெற்ற மற்றுமொரு ஐ.சி.சி கிண்ணத்துக்கான போட்டி மழையால் இடைநிறுத்தப்படும்போது முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 38 ஓவர் நிறை வடைந்திருந்த நிலையில் 5 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் சோலங்கி 62, அன்ரூ ஸ்ரோஸ் 25 ஓட்டங்களையும், கொலிங்வூட் 35, ஜோன்ஸ் 23 ஓட்டங் களையும் ஆட்ட மிழக்காது பெற்றிருந்தனர்.



பந்து வீச்சில் சிம்பாப்வேயின் அறிமுக வேகப் பந்துவீச்சாளர் றொபின்ஸ்போட் 43 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக் கெட்டுக்களையும், பன்னியங்கார, சிபண்டா, கொண்டோ தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

மேற்படி இரு அணிகளுக்குமிடையிலான போட்டி நள்ளிரவு வரை தொடரவில்லை.

## ஐ.சி.சி மினி உலகக்கிண்ண போட்டி முன்னாள் வீரர்களின் எதிர்வு கூறல்

**டேவிட் கோற்ரொன்- முன்னைநாள் சிம்பாப்பே அணித் தலைவா.**



அவுஸ்திரேலியா வெற்றியீட்டும் என்பதில் யாரும் கேட்பார் என நான் நினைக்கவில்லை. எனது கருத்துப்படி அவர்கள் தரமான நிலையில் உள்ளனர். எனது இரண்டாவது தெரிவாக இங்கிலாந்து அணி இருக்கிறது. அவர்கள் நன்றாக விளையாடுகிறார்கள் அவர்கள் தீவிரமான போட்டியைக் கொண்டுள்ளனர். பாகிஸ்தானும் கூட சிறந்த அணியைக் கொண்டுள்ளது. சச்சின்டெண்டுல்கர் இல்லாமல் இந்தியா வெற்றியை நினைக்க முடியாது.

**இறைக்வைற்- முன்னைநாள் இங்கிலாந்து அணியின் பல் துறைவீரர்.**

அவுஸ்திரேலியா வெல்லும் என வெளிப்படையாகத் தெரிந்தாலும்



இங்கிலாந்து அணி மிகவும் திறமையாக விளையாடும் என நான் எதிர்பார்க்கிறேன்.

அன்றூ பிளின்ரோவ் உலகத்தில் பிரபல்யமான கிரிக்கெட் விளையாட்டு வீரர்களில் ஒருவர் அவரும். ஸ்ரீவ் காமிசனும் சேர்ந்து செல்லும் போது இங்கிலாந்தணி முழுச்சுற்றிற்கும் போக முடியும். நான் நினைக்கின்றேன் கடுமையாக போட்டி நன்றாக இருக்கும் .இது தொடங்கும் வரை நான் காத்திருக்கிறேன்.

**மாக்றிச்சாட்சன்- நியூசிலாந்தின் தொடக்க ஆட்டக்காரர்.**

ஐ.சி.சி சம்பியன் போட்டியைப போன்ற ஒரு போட்டியில் ஒரு சுற்றில் ஒரு வெற்றியாளரைத தெரிவு செய்வது எப்பொழுதும் கடினம். அவுஸ்



திரேலியாவுக்கும் நியூசிலாந்திற்கும் இடையிலான முதல் சுற்று விளையாட்டில் வெற்றி பெற்றவர் இறு திப்போட்டிக்குப் போவார் என நான் நம்புகின்றேன். நியூசிலாந்து அணி முன்னேற்றமானதாகவுள்ளது. இது அவுஸ்திரேலியாவிற் கெதிரான போட்டிகளில் ஒரு நம்பிக்கையைப் பெற்று முழுச்சுற்றிற்கும செல்லலாம்.

## அன்றைய இரவு எனக்கு ஏமாற்றமானது வருத்தப்படுகிறார் சுழல்பந்துவீரர் முரளிதரன்



நான் உலக சாதனை செய்தவன். அதைத்தவிர பெரிய விருதுகள் எனக்குத் தேவை இல்லை ஆனாலும் ஐ.சி.சி., விருது வழங்கும் விழாவின் அன்றைய இரவில் நான் மிகவும் ஏமாற்றப்பட்டேன். கிரிக்கெட் நிர்வாகிகள் சிலர் எப்போதும் மாறுபட்ட கண்ணோட்டத்துடன் என்னை கவனிக்கின்றனர். நான் முறையாகப் பந்து வீசுவதில்லை என்பது அவர்களது கருத்து. இதன் காரணமாகவே, அந்த விருது நிகழ்ச்சியில் நான் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டேன்.

என்னைப் புறக்கணித்தவர்கள், ஆறு மாதத்திற்கும் மேல் விளையாடாமல் இருந்த ஒருவருக்கு (ஷேன் வோர்ன்) ஆண்டின் சிறந்த டெஸ்ட் அணியில் இடம் கொடுத்த தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. வோர்னின் ஒட்டு மொ[illegible] கிரிக்கெட் வாழ்க்கையைக் கணக்கில் எடுத்திருந்தால் கூட இதை ஏ[illegible]க்கொள்ளலாம் ஆனால் இந்த விருதுக்கு ஓர் ஆண்டு காலம் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும் போது என்னை ஏன் புறக்கணித்தார்கள் வோர்னை ஏன் தேர்வு செய்தார்கள் என்பது புரியவில்லை. சர்வதேச கிரிக்கெட்டில் நான் தொடர்ந்து புறக்ணிக்கப்படுவது ஏமாற்றமான விஷயம் இவ்வாறு தெரிவித்துள்ளார் முரளிதரன்.

இது குறித்து ஐ.சி.சி., விருது தேர்வுக்குழுத் தலைவர் ரிச்சி பெனாட் அளித்த விளக்கத்தில், “ஆறுமாத தடையில் இருந்து திரும்பி வந்ததும் அசாத்திய திறமை காட்டியிருக்கிறார். வோர்ன் அதன் அடிப்படையில்தான் அவர் கௌரவிக்கப்பட்டார். மற்றபடி, அதிக விக்கெட் வீழ்த்திய முரளிதரனுக்கு அதிர்ஷ்டமில்லை என்றுதான் என்னால் சொல்ல முடியும்” என்கிறார்.

## பலத்துடன் செல்கிறது அவுஸ்.

நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் பங்கேற்பதற்காக அவுஸ்திரேலிய அணி அடுத்த மாதம் இந்தியா செல்கிறது இந்தத் தொடருக்கான ஆஸி., அணி சிட்னியில் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. ரிக்கி பொண்டிங் தலைமையிலான இந்த அணியில், இந்திய ஆடுகளங்களுக்கு சாதகமான வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். ஒருநாள் போட்டிகளில் தங்களை நிரூபித்த மைக்கேல் கிளார்க், நாதன் ஹாரிட்ஸ் இருவரும் டெஸ்ட் போட்டிகளுக்கு அறிமுகமாகின்றனர். இந்திய மண்ணில் ஏற்கனவே கிளார்க் சிறப்பாக விளையாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.




## உலகக் கோப்பை தகுதிக் கால்பந்து ஈராக் அணி அபார வெற்றி—

உலகக்கோப்பைக் கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் ஈராக் அணி தைவானை 4-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

ஜெர்மனியில் 2006 இல் உலகக்கோப்பைக் கால்பந்து போட்டி நடக்கிறது. இதற்கான தகுதிச்சுற்றுப்போட்டிகள் பல்வேறு இடங்களில் நடக்கின்றன. ஆசிய மண்டலத்திற்கான இரண்டாம் நிலைப் போட்டியில் கடந்த வியாழனன்று தைவான் அணி ஈராக்கைச் சந்தித்தது. தைவானுக்கு உள்ளூர் இரசிகர்கள் ஆதரவு தந்தபோதும், ஈராக்கின் எழுச்சியைக் கட்டுப்படுத்த இயலவில்லை. ஆசியகோப்பை, எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் அபாரமாகச் செயற்பட்ட ஈராக் இப்போட்டியிலும் அசத்தியது. இந்த அணியின் சாலிக்சாலி (4.43ஆவது நிமிடம்) இரண்டு கோல் அடித்தார்.ஹடிப் (75 ஆவதுமிடம்), யூனிஸ் காலிப் (86 ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடிக்க, ஈராக் 4-1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. தைவான் சார்பில் 82 ஆவது நிமிடத்தில் ஹுவாங்வெய் ஒரு கோல் அடித்து ஆறுதல் தேடினார். மற்றொரு போட்டியில் ஆசியாவின் வலிமைமிக்க தென்கொரிய அணி வியட்நாமை 2-1 என்ற கோல் கணக்கில் வென்றது. இதே போல் வடகொரிய அணி தாய்லாந்தை 4-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.




ஐரோப்பிய மண்டலத்திற்கான தகுதிச்சுற்றுப் போட்டியில் முன்னாள் உலகக்கோப்பைச் சம்பியன்களான பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி அணிகள் எளிதான வெற்றியை பெற்றன. பாரிசில் நடந்த போட்டியில் பிரான்ஸ் அணி பாரோ தீவுகள் அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இங்கிலாந்து அணி போலந்தை (2-1) மிக எளிதாக வென்றது. பிரிவு 5இல் இடம்பெற்றுள்ள இத்தாலி அணி மால்டோவாவை 1-0 என்ற கோல் கணக்கில் போராடி வென்றது.

## ஜப்பான் தடகளத்தில் காட்லின், கிரீன்





ஜப்பான் தடகளத்தில் அமெரிக்காவின் ஜஸ்டின் காட்லின், மவுரிஸ் கிரீன் மீண்டும் பலப்பரீட்சையில் இறங்குகின்றனர்.

ஜப்பானில் உள்ள யோகஹாமா அரங்கில்வரும் 23 இல் தடகளப் போட்டி நடக்கிறது. இதில் எதென்ஸ் ஒலிம்பிக்கில்100 மீற்றரில தங்கம் வென்ற அமெரிக்காவின் ஜஸ்டின் காட்லின் (9.87வினாடி) பங்கேற்கிறார் வெண்கலம்வென்ற மவுரிஸ் கிரீனும் (09.87 வினாடி)கலந்து கொள்வதால் எதிர்பார்ப்பு அதிகமாக உள் ளது. இவர்களைத் தவிர சிட்னி, அட்லாண்டா, பார்சிலோனா ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற நட்சத் திரங்களும் பங்கேற்கின்றனர்.




எதென்சில் 110 மீற்றர் தடை ஓட்டத்தில் தங்கம் வென்று சாதித்த சீன வீரர் லியுஜியாங் பங்கேற்பது சிறப்பம்சம். இவருக்கு இம்முறை அமெரிக்காவின் ஆலன்ஜான்சன் கடும் போட்டியைக் கொடுக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



**சிந்தனைக்கு**

மனித ஆளுமை பாலியல் வேறுபாட்டிற்கு அப்பாலானது. ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கின்றது; அதுமனிதப் பிறவிகளுக்குப் பொதுவானது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 11-09-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com

## காழ்ப்புணர்ச்சி !

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும், பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும், கருணாவிற்கு அரசாங்கம் எந்தவிதமான ஆதரவையும் வழங்கவில்லை, கருணாவும் ஒரு பயங்கரவாதியே- இது போன்ற அறிவிப்புக்களை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்டுவரும் அதேவேளை, சிறிலங்கா படைத்தரப்பும், கிழக்கில் விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலில் தமக்கு எதுவித தொடர்பும் இல்லை என அடித்துக் கூறுகின்றது.

இந்த வகையிலேயே, மட்டு. மாவட்ட எல்லைக் கிராமமான புல்லுமலையில் விடுதலைப்புலிகளின் சோதனைச் சாவடி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்தும் இராணுவத் தரப்புத் தெரிவித்துள்ளது. தமக்கு இச்சம்பவம் பற்றி எதுவுமே தெரியவே தெரியாது என இராணுவப் பேச்சாளர் கற்பூரத்தை அணைத்துச் சத்தியம் பண்ணாத குறையாகப் பேசுகின்றார்.

ஆனால், இத்தாக்குதலை இராணுவத்தினரே மேற்கொண்டிருந்தனர் என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமே இல்லை. இதேவேளை, இராணுவத்தினருடன் சில இனவிரோத சக்திகளும் இருந்திருத்தல் வேண்டும். அத்தோடு, இத்தாக்குதல் முறியடிக்கப்பட்டதோடு, இதில் அவர்களுக்கு உயிரிழப்பும், காயங்களும் ஏற்பட்டிருந்தன என்பதற்குச் சடலங்களைக் காவிச் சென்று ஒப்படைத்தவர்கள் சாட்சியாகவும் உள்ளனர்.

சரி, இராணுவத் தரப்பு இத்தாக்குதலில் சம்பந்தப்படவில்லை என்ற இராணுவ அதிகாரியின் கூற்றுக்களை ஏற்றுக் கொள்வோம். ஆனால், இத்தாக்குதல் நடாத்தியவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்து வரவில்லை என்பதை அவரால் மறுக்க முடியுமா? அவ்வாறு மறுப்பதானால், இத்தாக்குதல்கள் நடாத்தியவர்கள் இராணுவ முன்னரங்க நிலைகளைக் கடந்து வந்து புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது தாக்குதல் நடத்திவிட்டுப் பின்னர் இராணுவ முன்னரங்க நிலைகளைத் தாண்டியல்லவா சென்றிருக்க வேண்டும்? இது இராணுவத் தரப்பிற்குத் தெரியாததெனின் இது பூச்சுற்றும் வேலையாக இல்லாது வேறு எதுவாக இருக்க முடியும்.

அதுவும் சரி, தாக்குதல்கள் நடத்தியவர்கள் யார்? எனவும் தெரியாது, அவர்கள் எவ்வாறு வந்து எவ்வாறு போனார்கள்? எனவும் தெரியாது. ஆனால், தாக்குதலில் சுமார் 35- 40 வரையிலானோர் பங்கேற்றனர் என்பதும், விடுதலைப்புலிகளில் எட்டுப் பேர் கொல்லப்பட்டனர் என்பதும், அங்கிருந்தவர்களின் ஆயுதங்கள் உட்பட பல ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்பட்டன என்பதும், தாக்குதல் நடாத்தப்பட்ட இடத்தை சில மணி நேரம் தாக்குதல் நடாத்தியவர்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் என்பதும் போன்ற உண்மைக்கு மாறான தகவல்கள் யாரால் தயாரிக்கப்பட்டன?

தாக்குதல் நடத்தியவர்கள் சில உயிர்களைப் பறிகொடுத்தமையும், ஏனையோர் தப்பியோடினர் என்பதுமே உண்மையான நிகழ்வாக இருக்கையில், சிறிலங்கா அரசின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள அரச தொலைக்காட்சி நிறுவனம் இத்தகைய தகவலை எவ்வாறு வெளியிட்டது? இவை ஆளும் தரப்பின் அபிலாசையா? கடந்த காலத்தில் வாங்கிய அடிகளின் குளிர் இன்னமும் விட்டுப் போகாத நிலையா?

இதற்கு இரு தினங்களின் முன்னரும் அரச கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சி (ரூபவாகினி) இத்தகையதொரு தகவலை வெளியிட்டது. "மட்டு. மாவட்டத்தில் கருணா குழுவினர் விடுதலைப்புலிகள் மீது பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் எட்டு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்" என்பதே அது. ஆனால், அத்தகைய தொரு சம்பவமே இடம்பெறவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

அவ்வாறானால், எட்டு விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதான தொரு தகவல் வெளியிடுவதற்கென ஏற்கனவே அரச தரப்பு தயாராகிவிட்டதா? அதாவது, மாமனிதர் குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்பதாகவே அவர் குடும்பத்தினருக்கான துயர் தெரிவிக்கும் கடிதம் சனாதிபதி செயலகத்தினால் தயாரிக்கப்பட்டது போன்றதா? இதுவும்.

சந்திரிகா அரசாங்கத்திற்கு விடுதலைப்புலிகள் மீதான இத்தகைய காழ்ப்புணர்ச்சி ஏன்? இது எந்தவகையில் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு உதவக் கூடும்? சரி, இராணுவத் தரப்புக் கூறுவது போன்று தாக்குதலில் அவர்களுக்குச் சம்பந்தம் இல்லை எனவும், சனாதிபதி கூறுவது போன்று கருணாவிற்கு அரசாங்கம் ஆதரவை அளிக்கவில்லை எனவும் வைத்துக் கொள்வோம்.

அவ்வாறானால், ஏன் கருணா குழுவினர் மேற்கொண்டதாக நடக்காத சம்பவங்கள் பற்றியும், நடந்தவற்றிற்கு மாறான செய்திகளையும் அரசாங்கத் தொலைக்காட்சி வெளியிட வேண்டும்? இதனால், அரசாங்கம் கூற விளைவதுதான் என்ன? சிறிது நேர மன மகிழ்வா? அன்றித் தமிழ் மக்களுக்கு மன உளைச்சலைக் கொடுப்பதற்கானது என்ற திருப்தியா? விடுதலைப்புலிகள் மீதான காழ்ப்புணர்ச்சியா?

ஆனால், அரசாங்கத்தின் நோக்கம் எதுவாக இருப்பினும், இத்தகைய பிரச்சாரங்கள் சமாதானம் நோக்கிய பாதையைச் சீர் செய்யமாட்டாது. எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும். அதாவது, அரசாங்கத்தின் மீது ஏற்கனவே, உள்ள அவநம்பிக்கையை மேலும் வலுப்படுத்துவதாகவே இருக்கும். அத்தோடு, சனாதிபதி சந்திரிகா அரசாங்கத்தின் அபிலாசைகளையும் அவை வெளிப்படுத்துபவையாக இருக்கும்.

# சின்னமுத்து, ருபெல்லா நோய்களிலிருந்து எம் இளம்சந்ததியைப் பாதுகாப்போம்

**கிளி.சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் அறைகூவல்**

சின்னமுத்து, ருபெல்லா என்னும் கொடிய நோய்களிலிருந்து எம் இளம் சந்ததியைப் பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம் ஒவ்வொரு வருடமும் 20 இலட்சம் சிறுவர்களை உலகெங்கும் பலிகொள்ளும் சின்னமுத்து மற்றும் ருபெல்லா நோய்களில் இருந்து எமது இளம் சந்ததியைப் பாதுகாக்க அணிதிரள்வோம் என கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் வேண்டியுள்ளனர்.

எமது உடலிலே தீரமான பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன் மரணத்திற்கு ஆளாக்கும் சின்னமுத்து, ருபெல்லா ஆகிய நோய்களை உலகிலிருந்து ஒழிக்கும் தடுப்பு மருந்தேற்றும் திட்டத்தில் எம் இளம் சந்ததியை பங்கெடுக்கச் செய்வோம். இந்த இரண்டு நோய்களும் இளம்பருவத்தினரையே பெரும்பாலும் தாக்குகின் றன.

சின்னமுத்து நோய் மரணத்தை மட்டும் கொண்டுவருவதில்லை கடுமையான சுவாச நோய்கள், நிமோனியா, மூளைக்காய்ச்சல், மூளைபா திக்கப்படுதல், செவிட்டு, குருட்டு தன்மைகள் ஏற்படுதல் தொடர் வயிற்றோட்டம் போன்ற பாதிப்புக் களையும் ஏற்படுத்தும்.

ருபெல்லா எனப்படும் ஜேர்மன் சின்னமுத்து கர்ப்பகாலத்தின் ஆரம்பத்தில் தாய்மாருக்கு ஏற்படுமாயின் பிறக்கும் பிள்ளைகளுக்கு பாராதூரமான பிறவிக் குறைபாடுகளை ஏற்படுத்துகின்றது. அதாவது குழந்தைகளின் பிறப்பு நிறைகுறைவு, பிறவிச் செவிட்டு தன்மை, குருட்டுத் தன்மைகள், இருதயக்கோளாறுகள், சிறு தலையுடைய சிசுக்கள் , மூளைவளர்ச்சிக் குறைவு போன்ற பல குறைபாடுகள் ஜேர்மன் சின்னமுத்தால் ஏற்படுகின்றன.

ஆகவே இந்த இரு கொடிய நோய்களில் இருந்தும் எமது இளைய சந்ததியைக் காப்பாற்ற அவர்களுக்குத் தடுப்பு மருந்து கொடுப்போம். இன்றும் நாளையும் 16 தொடக்கம் 21 வயதான ஆண், பெண் இருபாலருக்கும் தடுப்பு மருந்து கொடுப்போம்.

01-01-1983 இக்கும் 01-01-1988க்கும இடையில் உங்கள் பிள்ளைகள் பிறந்திருப்பின் கட்டாயம் தடுப்பு மருந்து கொடுக்கத் தவறாதீர்கள் இதற்கு முன்பு இந்நோய்களுக்கு தடுப்பு மருந்துகளை உங்கள் பிள்ளைகள் பெற்றிருந்தாலும் அவர்களுக்கு தடுப்பு மருந்தோற்றத் தவறாதீர்கள் உங்களுக்கு அருகிலுள்ள தடுப்பு மருந்து வழங்கும் நிலையங்களுக்கு உங்கள் பிள்ளைகளை அனுப்பிவையுங்கள் எனவும் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் வேண்டியுள்ளனர். (சோ.கு)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இந்தியாவில் தடை செய்யவேண்டுமாம்

**ஜனதா கட்சித்தலைவர் சுப்பிரமணிய சுவாமி கூறுகிறார்**

இந்தியாவில் தமிழ்தேசிய கூட்டமைப்பையும் தடை செய்ய வேண்டும் என ஜனதாகட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி இந்திய மத்திய அரசிடம் கோரியுள்ளார்

தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளைப் போலவே செயற்பட்டு வருகிறது சிறிலங்காப் பாராளுமன்றத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளாகவே செயற்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆசியன் ரிபியுன் இதழுக்கு செவ்வியளித்துள்ள அவர்,

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு இந்தியாவில் அமைந்துள்ளதைப் போன்ற சமஷ்டி முறையே உரிய தீர்வை ஏற்படுத்தும். கொழும்பு அரசாங்கம் இது தொடர்பாக விரைவில் அறிவித்தல் ஒன்றை விடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

புதிய அரசியல மைப்பு ஒன்றின் கீழ் இலங்கையின் பாராளுமன்றம் இந்தியாவில் உள்ளதைப் போன்று சமஷ்டி முறை ஒன்றுக்கு வழிவகுத்து அரசியல மைப்பு சபையாக மாற்றப்பட வேண்டும்

அதன் கீழ் தமிழர் அதிகமாக வாழும் பிரதேசத்திற்கும், சிங்களவர் அதிகமாக வாழும் பிரதேசத்திற்கும் தனித்தனியே சட்டசபைகள் அமைக்கப்படல் வேண்டும்

குறிப்பிட்ட சட்டசபைகள் பிரிவினைக்கு முற்படுமானால் அதனை கலைத்து விட மத்திய அரசாங்கத்துக்கு அதிகாரம் தரப்படல் வேண்டும் இந்திய அரசியலமைப்பில் 356 ஆவது சரத்தின் கீழ் இவ்வாறான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

அதனைப்போன்ற ஏற்பாடு இலங்கையின் புதிய அரசியலமைப்பிலும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் எனவும் சுப்பிரமணிய சுவாமி ஆலோசனை கூறியுள்ளார்

இலங்கை வேண்டுகோள் விடுக்குமாக இருந்தால் இந்தியா தமது இராணுவத்தின் ஒரு பிரிவையும்.,வான் படையின் ஒரு பிரிவையும் கொழும்பில் நிலை கொள்ளச் செய்யலாம். இந்த விடயத்தில் ஏற்கனவே இலங்கைக்கு இந்திய அமைதிப்படையாக சென்றிருந்த போது கிடைத்த அனுபவம் இந்திய இராணுவத்துக்கு இருப்பதாக அவர் கூறினார். (32)

# பிரதியமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு கம்பளை நீதிமன்றம் பிடிவிறாந்துபிறப்பித்தது

மின்சக்தி எரிசக்தி பிரதிய மைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு கம்பளை மஜிஸ்திரேட் நீதவான் இரண்டு பிடிவிறாந்துகளை பிறப்பித்துள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரும், அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கம்பளை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. அவர் நேற்று முன்தினம் ஆஜராகாததன் காரணமாகவே பிடிவிறாந்துகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். நேற்று முன்தினம் பிரதியமைச்சர் பாராளுமன்றத்தில் கட்டாயமாக பிரசன்னமாகியிருக்க வேண்டும் என்ற தகவலை மஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு பாராளுமன்ற பொதுச் செயலாளர் எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியனவற்றின் நீதியரசர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட யோசனை பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. இதன் காரணமாக பிரதியமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே பாராளுமன்றத்தில் பிரச்சன்னமாக வேண்டும் என்று விவாதிக்கபட்டிருந்ததாக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் பாராளுமன்ற செயலாளர் குறிப்பிட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். எவ்வாறாயினும் பாராளுமன்ற செயலாளரின் அந்த கடிதத்தை மஜிஸ்திரேட் நீதவான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று அமைச்சர் சுட்டிக் காட்டினார். பாராளுமன்ற செயலாளரினால் இதற்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் ஒன்றையும் கம்பளை மஜிஸ்திரேட் நீதவான் நிராகரித்திருந்ததாகவும் அமைச்சர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

# பொருண்மிய மதியுரையகத்தின் திருகோணமலை அலுவலகம் திறப்பு

திருகோணமலை பொருண்மிய மதியுரையகத்தின் திருகோணமலை அலுவலகத்தின் திறப்பு விழாவும், லண்டன் ரி.ஆர்.டெக் நிறுவனம் திருகோணமலை ஐ.ரி.டெக் அமைப்புடன் இணைந்து திருகோணமலை நகரில் நடத்தும் கணினிப்பயிற்சி நிலைய அங்குரார்ப்பண நிகழ்வும் நேற்றுக் காலை இடம்பெற்றன. தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திருகோணமலைப் பணிப்பாளர் சீசர் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

பொருண்மிய மதியுரையகத்தின் அலுவலகத்தைத் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். கணினிப்பயிற்சி நிலையத்தை திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் கு.திலகரத்னம் திறந்து வைத்தார். கணினிப்பயிற்சி நெறியைக கிழக்கு புனர்வாழ்வுக் கழகத் தலைவர் சட்டத்தரணி கா.சிவபாலன் தொடக்கி வைத்தார். பின்னர் நடந்த கூட்டத்திற்கு பி.சத்தியசீலராஜா தலைமை வகித்தார். (25)

# கச்சதீவில் கைவிட்டுச் செல்லப்பட்ட அகதிகள் அழைத்து வரப்பட்டனர்

தமிழ் நாட்டின் அகதிமுகாம் களிலிருந்து படகு வழியாகத் தாயகம் திரும்ப முற்பட்ட வேளை கச்சதீவுப்பகுதியில் அநாதரவாக இறக்கிவிடப்பட்ட அகதிகள் 25 பேரும் பாதுகாப்பாக நெடுந்தீவுப் பகுதிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கப் படகினில் சென்ற நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை அதிகாரிகள் கச்சதீவில் தத்தளித்த அகதிகளைப் பாதுகாப்பாக நெடுந்தீவுக்கு மீட்டுவந்துள்ளனர்.

இராமேஸ்வரம் தங்கச்சிமடம் பகுதியிலிருந்து இந்திய மீனவர்களது படகுகளில் ஏற்றி வரப்பட்டிருந்த இவர்கள் நெடுந்தீவு எனக் கூறப்பட்டு கச்சதீவினில் கடந்த ஞாயிறு இறக்கி விடப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அங்கு கடந்த ஐந்து நாட்களுக்கு மேலாக அந்தரித்தவர்களில் மூவர் அங்கு கைவிடப்பட்டிருந்த கடற்படைப் படகு மூலம் நெடுந்தீவை வந்தடைந்தனர். அவர்களால் வழங்கப்பட்ட தகவலையடுத்தே எஞ்சிய 25 அகதிகளும் கடற்படையின் பாதுகாப்புடன் நெடுந்தீவிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

மன்னார், திருகோணமலை, வவுனியா மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களைச் சேர்ந்த இவர்களில் 5 பெண்களும், 6 சிறுவர்களும் உள்ளடங்கியிருந்தனர். அத்துடன் 10 மாத வயதுடைய குழந்தையொன்றும் அக்குழுவில் இருந்துள்ளது.

இதேவேளை மேற்படி அகதிகளை யாழ்ப்பாணம் அழைத்து வந்து யாழ்.செயலக மூடாக அவர்களது மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (27)

## கடற்றொழிலாளர்- கடற்படையினர் வடமராட்சியில் சந்திப்பு

யாழ். வடமராட்சி கடற்றொழிலாளர்களுக்கும் கடற்படையினருக்குமிடையான முக்கிய சந்திப்பொன்று நேற்று வடமராட்சி வடக்கிலுள்ள 524 ஆவது படையணி தலைமையகத்தில் இடம்பெற்றது.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினது ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்சந்திப்பில் கடற்படையினரால் அமுல்படுத்தப்பட்டுள்ள பாஸ் நடைமுறை, தொழிலுக்கான நேரக்கட்டுப்பாட்டு நடைமுறை, கடல் பாதுகாப்பு வலயம் நடைமுறை என்பன நீக்கப்படல் வேண்டுமென மீனவத்தரப்பால் வலியுறுத்தப்பட்ட போதும் அதற்கு கடற்படையினர் இணக்கம் தெரிவிக்காததால் இச்சந்திப்பு முடிவுகள் எட்டப்படாமலேயே நிறைவுபெற்றது.

இதேவேளை கடற்படையினரது இவ்வாறான சந்திப்புகள் மீது நம்பிக்கை கொண்டிராத பெருந்தொகையான மீனவர்கள் இச் சந்திப்பை புறக்கணித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (33)

-வல்லைவெளியில் காணப்பட்ட எலும்புக்கூடு-

## சேமக்காலையில் புதைக்கப்பட்ட சடலத்தின் உடையதாகும்

அண்மையில் வடமராட்சியின் வல்லைப்பகுதியிலுள்ள சேமக்காலையொன்றில் கண்டு பிடிக்கப்பட்ட எலும்புக்கூடு ஏற்கனவே அங்கு புதைக்கப்பட்டிருந்த ஒரு சடலத்தினதே என விசாரணைகளின் போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை நீதவான் அறிவித்துள்ளார்.

சடலமொன்றை புதைப்பதற்காக கிடங்கொன்றை வெட்டியவேளையில் ஏற்கனவே புதைக்கப்பட்டிருந்த சடலமொன்றினை வெளியே எடுத்து வீசியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு வீசப்பட்டு பற்றையினுள் கண்டு பிடிக்கப்பட்ட எலும்புக்கூட்டுத் தொகுதியின் மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பப்பட்டு இரசாயனப்பகுப்பாயவிற்கு உட்படுத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவ் வேளையிலேயே மேற்படி எலும்புக்கூடு மண்ணில் புதைக்கப்பட்டு பின்னர் மீள எடுக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டதாக தெரியவருகிறது.

இதனிடையே மேற்படி சேமக்காலையில் ஏற்கனவே புதைக்கப்பட்டிருந்த சடலத்தை எடுத்து வெளியே 'வீசியெறிந்திருந்ததாகவும் கூறப்படும் தொழிலாளர்கள் இருவருக் கெதிராகவும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள நெல்லியடிபொலிசார் முற்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (27)

### இ.தொ....

மாணம் செய்து கொண்டார் அதேநேரம் அந்த அமைச்சுக்கான பிரதி அமைச்சராக எம் எஸ் செல்லசாமி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார் இந்த நிகழ்வுகள் சனாதிபதி செயலகத்தில் நடைபெற்றன. ஆனால் அதன் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் அமைச்சுப் பதவி எதனையும் ஏற்கவில்லை.(32)

### இந்தியப்....

பிரவேசித்து தொழிலில் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக வடபகுதி மீனவர்கள் பெரும் இன்னல்களைஅனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### புலிகளை....

தாக்குதலை நடத்தியோர் மேற்படி நிறுவனத்திற்குள் நுழைந்து அங்கிருந்த ஊழியர்களை துப்பாக்கி முனையில் மிரட்டியதோ, துப்பாக்கியால் தாக்கி அவர்களைப் பலவந்தப்படுத்தியே இரு சடலங்களை அகற்றியுள்ளனர். மேற்படி நிறுவனத்திற்குச் சொந்தமான நோயாளிகளைக்காவும் படுக்கையைப் பாவித்து மேற்படி இரு சடலங்களையும் அகற்றி அவற்றை மேற்படி நிறுவனத்தின் வாகனத்தின் மூலம் தம்பட்டி இராணுவ முகாம் பகுதிக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

அவ்வாறு தாக்குதல் நடத்தியோர் மேற்படி இரு சடலங்களையும் கொண்டு இராணுவ முகாமிற்குள் சென்றதோடு இந்த விவகாரம் குறித்து யாருக்கும் எந்தத் தகவலும் கொடுக்கக்கூடாது என மேற்படி நிறுவன ஊழியர்களை எச்சரித்துச் சென்றுள்ளனர். மேற்படி ஊழியர்கள் அடுத்த நாள் காலை 8.30 மணியளவிலேயே தங்கள் நிறுவனத்திற்குத் திரும்பினர் என்பதோடு மேற்படி நிறுவன ஊழியர்களின் வாக்கி-டோக்கிகள் மற்றும் செல்லிடத் தொலைபேசிகள் என்பனவும் தாக்குதலாளிகளால் அபகரிக்கப்பட்டுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தாக்குதலாளிகள் மேற்படி கண்ணிவெடியகற்றும் நிறுவன ஊழியர்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்களில் நான்கு ஊழியர்கள் காயமடைந்துள்ளனர். அவர்களில் மூவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேற்படி நிறுவன ஊழியர்களின் சம்பவச் சாட்சியங்கள் மற்றும் தம்பட்டி இராணுவ முகாமிற்கும் எமது முன்னணிக் காவலரணிற்குமிடையேயான இருப்பிட அமைவுகள் என்பனவும், தாக்குதலை நடத்தியோர் சடலங்களை இராணுவ முகாமிற்கே கொண்டு சென்றனர் என்ற உண்மையும் இந்தத் தாக்குதலில் சிறிலங்கா இராணுவத்தின் பங்கை சந்தேகத்திற்கிடமின்றி எடுத்துரைக்கின்றன. இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது இது தான் முதற் தடவையல்ல என்பது கண்காணிப்புக்குழுவிற்கு நன்றாகவே தெரியும் என்பதோடு போர் நிறுத்த உடன்பாட்டை ஆரோக்கியமான நிலையில் வைத்திருப்பதற்கு இச் சம்பவங்கள் எந்த வகையிலும் உதவாது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அத்தோடு தமிழர்களினதும் அவர்களின் தலைமையினதும் பொறுமை காக்கும் தன்மையை இல்லாது செய்யும் வகையிலேயே இச் சம்பவத் தொடர்கள் இடம்பெற்றுவருகின்றன. இவ்வாறான சம்பவங்களின் மூலம் தமிழர் தரப்பினரைக் கோபமூட்டி சமாதானத்திற்கு இடையூறான நிலையொன்றிற்கு இட்டுச் செல்லும் நடவடிக்கையையே சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டு வருகிறது. என்வே இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்கான ஆணித்தரமான நடவடிக்கைகளை எடுத்து சமாதானச் சூழ்நிலை தொடர்வதற்கான செயற்பாடுகளை கண்காணிப்புக்குழு உடனே மேற்கொள்ளவேண்டுமெனவும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கருத்தாடல்

தமிழ் மக்களின் ஒன்றிணைவை இலக்காகக் கொண்டு செயற்படும் அரங்கக்குழு நடாத்தும் கருத்தாடல் நிகழ்வு ஒன்று இன்று மாலை 2.30 மணியளவில் யாழ். பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறுவுள்ளது இக் கருத்தாடல் களத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் கல்விமான்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனா. (36)

### கலந்துரையாடல்

கிளி.மாவட்டத்திலிருந்து 2004. க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 9.30 மணிக்கு கிளி.மாவட்ட பல்கலைக் கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது. எனவே புகுமுக மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளி.மாவட்ட புகுமுக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

### சக்கரநாற்காலி வழங்கல்

யாழ்ப்பாண மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வலுவிழந்தோருக்கான சக்கரநாற்காலி வழங்கும் வைபவம் வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு நல்லை ஆதின விருந்தினர் மணடபத்தில் நடைபெறவுள்ளது

### சிறிலங்காவுக்கு...

அறிவித்துள்ளார். இதன்படி சிறிலங்காவுக்கு ஜப்பானிய அரசாங்கம் 263 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது. 36 வது தடவையாக ஜப்பான் வழங்கும் இந்த உதவி சிறு கைத்தொழில், சுற்றாடல் பேணல், மற்றும் நட்புறவு என்ற பிரிவுகளின் கீழ் வழங்கப்படவுள்ளது. (32)

## உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு 10 கணினிகள் அன்பளிப்பு

வடமராட்சி கிழக்கு உடுத் துறை மகாவித்தியாலயத்திற்கு பிரான்ஸ் கிறிற்றல் நகரில் இயங்கிவரும் தென்றல் எனப்படும் தமிழ்மாணவர் அமைப்பின் அனுசரணையுடன் வடமராட்சிக் கிழக்கைச் சேர்ந்த செல்லையா என்பவரின் நிதியுதவியில் 10 கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

வடமராட்சிக் கிழக்கிலிருந்து 1981 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்று பிரான்சில் வசித்து வரும் செல்லையா அவர்களும் அவரது குடும்பத்தினருமாக இணைந்து பிரான்ஸ் கிறிற்றல் தென்றல் தமிழ் மாணவர் அமைப்பின் ஆதரவுடன் 10 கணினிகளையும் அதற்கான






இணை உபகரணங்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ள அதே வேளை, அவற்றை இயக்குவதற்கான மின் பிறப்பாக்கியையும் அன்பளிப்புச் செய்துள்ளனர். இவற்றைக் கையளிக்கும் நிகழ்வும் இதற்கான மண்டபத் திறப்புவிழா நிகழ்வும் நேற்றுக்காலை 9.00 மணியளவில் உடுத்துறை மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் மங்கல விளக்கினை மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி இரகுநாதன், நிதித்துறையைச் சேர்ந்த தயாளன், திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் ஈழவாணி வடமராட்சிப் பிரதிக கல்விப் பணிப்பாளர் அருளானந்தம் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழ்த்தேசியக் கொடியினை வடமராட்சிக் கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் புகழேந்தி ஏற்றிவைத்தார். தொடர்ந்து கணினிகள் வைப்பதற்காக அமைக்கப்பட்ட மண்டபத்தினை கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை அவர்கள் ... களேஸ் நாடாவைவெட்டித் திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து கணினிகளை செல்லையா அவர்கள் வடமராட்சிக்கிழக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வரத்தினர் அவர்களிடம் அன்பளிப்புச் செய்தார். பாடசாலை அதிபரின் தலைமயில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமராட்சிக்கிழக்கு வலயக் கல்விப் பணிப்பாளர், மருதங் கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர், கல்விக்கழக துணைப் பொறுப்பாளர், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் நிதித்துறையைச் சேர்ந்த தாயகன், கணினியை அன்பளிப்புச் செய்த செல்லையா ஆகியோர் உரைகளை நிகழ்த்தினார்கள். இந்நிகழ்வில் பாடசாலை மாண வர்கள், ஆசிரியர்கள் கல்விசார் அதிகாரிகள் போராளிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச,தீ,11)

## உலருணவு நிவாரணம் மீளாய்வுக்கு எதிராக மக்கள் மகஜர்

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்காக வழங்கப்பட்டு வரும் உலருணவு நிவாரண வழங்கல் தொடர்பான மீளாய்வு நடவடிக்கைகளைக் கண்டித்து வடமராட்சிப் பிரதேச மக்கள் பருத்தித்துறை உதவி அரச அதிபர் எஸ்.வசந்தராஜாவிடம் கண்டன மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

நேற்றுக்காலை 9.00மணிக்கு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் திரண்ட ஏராளமான இடம்பெயர்ந்த மக்கள் இம்மகஜரைக் கையளித்துள்ளனர்.

யுத்தநிறுத்தம் அமுலில் உள்ள போது இயல்புவாழ்வு, மீள்குடியமர்வு என்பன சாத்தியப்படாததால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்குடாநாட்டில வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கான உலருணவு நிவாரணத்தை நிறுத்துவதை நோக்காகக் கொண்டு அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண மீளாய்வு நடவடிக்கைகள் கைவிடப்பட வேண்டும் எனக் கோரியுள்ள மக்கள்,

அரசின் மீளாய்வு நடவடிக்கைகள் கைவிடப்படாவிட்டால் பாரியளவிலான போராட்டங்களை நடத்தப் போவதாகவும் தெரிவித்துள்ளதுடன் இயல்புவாழ்வு மீள்குடியமர்வு என்பன சாத்தியப்படும் வரை நிவாரண உதவிகள் தொடர்ந்து வழங்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர். (33,27)

### வீரவணக்க...

ஆகியோர் அணிவித்தனர். வீரவணக்க உரையினை நவாலி மகாவித்தியாலய உபஅதிபர் சர்வதேச மாணவர் பேரவையைச் சேர்ந்த கிருஷ்ணா கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி பூரணி ஆகியோர் ஆற்றினார். தொடர்ந்து மாவீரரது வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்து வரப்பட்டு பாண்ட் இசை அணிவகுப்பு மரியாதையுடன் பி.ப 4.00 மணிக்கு புனித விதை குழியில் விதைக்கப்பட்டது. (36,33,27)

### கனேடிய....

கேட்டுக்கொண்டனர்.இதனை ஏற்றுக்கொள்ள கனேடிய உயர் ஸ்தானிகர் சர்வதேசத்தின் அக்கறையையும் இந்த சந்திப்பின் போது வெளிப்படுத்தினார் (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.